கலா சிந்தாமணி

புத்தகம் சு 6 | "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" —திருக்குறள். | பகுதி சு 6

திருமுருகாற்றுப்படை.

[௩.—திருவாவினன்குடி]

(115-ம் பக்கத் தொடர்ச்சி.)

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால் நரை முடியினர்
மாசு அற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பல உடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம் வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடும் சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனி இல் காட்சி முனிவர் முன் புகப்
புகை முகந்து அன்ன மாசு இல் தூ உடை
முகை வாய் அவிழ்ந்த தகை சூழ் ஆகத்துச்
செவி நேர்பு வைத்த செய்வு உறு திவவின்
நல் யாழ் நவின்ற நயன உடை நெஞ்சின்
மெல் மொழி மேவலர் இன் நரம்பு உளர
நோய் இன்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர் தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன் உரை கடுக்கும் திதலையர் இன்னசைப்
பருமம் தாங்கிய பணிந்து ஏந்து அல்குல்
மாசு இல் மகளிரொடு மறு இன்றி விளங்கக்
கடுவோடு ஒடுங்கிய தூம்பு உடை வால் எயிற்று
அழல் என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந் திறல்

பாம்பு படப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ் சிறைப்
புள் அணி நீள கொடிச் செல்வனும் வெள் ஏறு
வலவயின் உயரிய பலர் புகழ் திணிதோள்
உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூ எயில் முருக்கிய முரண் மிகு செல்வனும்
நூற்றுப் பத்து அடுக்கிய நாட்டத்து நூறு பல்
வேள்வி முற்றிய வென்று அடு கொற்றத்து
ஈர் இரண்டு ஏந்திய மருப்பின் எழில் நடைத்
தாழ் பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற் பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய
உலகம் காக்கும ஒன்று புரி கொள்கைப்
பலர் புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏமுறும் ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவு இல் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்
பகலில் தோன்றும் இகல் இல் காட்சி
நால் வேறு இயற்கைப் பதினொரு மூவரோடு
ஒன்பதிற்று இரட்டி உயர் நிலை பெறீஇயர்
மீன் பூத்து அன்ன தோன்றலர் மீன் சேர்பு
வளி கிளர்ந்து அன்ன செலவினர் வளி இடைத்
தீ எழுந்து அன்ன திறலினர் தீப் பட
உரும இடித்து அன்ன குரலினர் விழுமிய
உறு குறை மருங்கில் தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்து உடன் காணத்
தாவு இல் கொள்கை மடந்தையொடு சில் நாள்
ஆவினன் குடி அசைதலும் உரியன். அதாஅன்று.

[ச.—திருவேரகம்]

இரு மூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல் குடி
அறு நான்கு இரட்டி இளமை நல்லி யாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன் நவில் கொள்கை
மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இரு பிறப்பாளர் பொழுது அறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்று புரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அரு மறைக் கேள்வி
நா இயல் மருங்கில் நவிலப் பாடி
விரை உறு நறுமலர் ஏந்திப் பெரிது உவந்து
ஏரகத்து உறைதலும் உரியன். அதாஅன்று.

சைவசித்தாந்தம்.

1. சிவன்றன் திருக்கடைக் கண்ணுக்கு இடமாயுள்ளதுவே, சித்தாந்தம்.

2. ஒருசமயத்தின் கொள்கையு மன்றாய், திருவுள்ளக் கொள்கையாய், அவனது சொல்லாயுள்ளதுவே சித்தாந்தம்.

3. சீவசித்தை சிவத்தோடு ஏகமாக்கி அந்த (அழகு) முற்றிருக்கச் செய்வதுவே சித்தாந்தம்.

4. ஆன்ம சித்தானது தன்னறிவும் தன்செயலும் அற்று நிற்குமிடத்தை யுணர்த்துவதே சித்தாந்தம்.

5. ஆன்ம சித்திற்கு திரிபதார்த்த இலக்கணங்களை ஆதிமுதல் அந்தம்வரையில் விளக்குவதே சித்தாந்தம்.

6. எல்லாச் சமயங்களுடைய அறிவுகளையும் மேலெழுந்தோங்கவொட்டாது அந்தப்படுத்தித், தன்னுரை குன்றாது ஓங்கச் செய்வதுவே சித்தாந்தம்.

7. சீவசித்து சிவசித்து என்னுமிரண்டினுடைய அந்தத்தை முடித்துக் கூறுவதே சித்தாந்தம்.

8. சிவசித்து அருட்சத்தியோடு ஒன்றாயும், மயாசத்தியோடு வேறாயும், ஆன்மசத்தியோடு உடனாயும் நின்று உபகரிக்கும் உபகாரத்தை யுணர்த்துவதே சித்தாந்தம்.

9. ஆன்ம சித்தானது சிவசித்துக்கு மீளா ஆளாய் இருக்கும் அரும்பொருளை யுணர்த்துவதே சித்தாந்தம்.

10. சிவசித்து ஆன்மசித்துள் விளங்கித் தாமாகவே பிரகாசிக்கும் நிலையை விளக்குவதே சித்தாந்தம்.

11 அசித்திலக்கணமுடைய மாயா பாச சம்பந்தமாகிய எழுவகைப் பிறப் பிறப்பினையும், கன்மபாச சம்பந்தமாகிய 'நான்' என்பதையும் அந்தப்படுத்தி, ஆன்மசித்தை சித்திலக்கணமுடைய சிவசித்தாகப் பிரகாசிக்கச் செய்வதுவே, சித்தாந்தம்.

12. எல்லாம் போய்த் தம்மைத் தெளிந்தாராய்த் தாமே பொருளாகி, எம்மைப் புறங்கூறி இன்புற்றுச் சும்மை அவிகாரம் பேசும் அகம்பிரம்ம வெளியாம் இருளில் விடாது, குவளைக்கண்ணி கூறனையும், அவளுந்தானு முடனையும் விளங்கும் பரமானந்தப் பழங் கடலில் திளைக்கச்செய்வதுவே சித்தாந்தம்.

13. இங்ஙனம் கூறிவந்த இவையெல்லாம் அருளினால் ஆகமத்தே யறியச் செய்து, அளவினாலும் தெளியச்செய்து, சிவனை ஞானச்செய்தியாற் சிந்தையுள்ளே மருளெல்லாம் நீங்சக்கண்டு வாழச் செய்து, பிறவி மாயா விருளெலாம் இரித்து, அடியரோ டிருக்கச் செய்வதுவே சைவ சித்தாந்தம்.

கா. ஆலாலசுந்தரம் பிள்ளை, சென்னை.

அடக்கமுடைமை

1. அடக்கமுடைமையாவது 'மெய் மொழி மனங்கள் தீநெறிக்கட்புகாமல் அடக்கி வாழுதலாம். உடல் தனக்கு நேரும் சுகத்தையே கருதுந் தன்மையாதலின் அதன் வழிப்பட்டு யாம் நடந்தால் தீநெறிக்கண் புகுந்து கெடுவோம். மொழியோ எனின் உபயோகிக்கும் வகை நோக்கி நன்மையையுந் தீமையையும் அளிக்கின்றது. எனவே அதனையும் அதன் வழியே விடாது இடமறிந்து உபயோகித்தல் வேண்டும்.

'யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு'
என்பதியாம் அறியாததன்றே!

மனமும் தீயநெறிக்கண் புகுந்து கெடுந்தன்மையதாதலின் அதனையும் அடக்கி நம்பறிவின் வழிப்படுத்திக் கொள்ளவேண்டும். இதுபற்றியே பெரியாரும் 'மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்' என்றருளினார்.

2. இத்தகைய அடக்கமதனை யுடையார்க்கு எண்ணிறந்த நன்மைகளையும்,

அடங்காமை மிகுந்த துன்பத்தையு மளிக்கின்றன. அடக்கம், தன்னையுடையவரை வீடுபேற்றை யடையச் செய்து உயர்ந்தவராக்குகின்றது. இதுபற்றியே 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்பது கூறப்பட்டிருக்கின்றது. அடக்கமுடன் வாழ்வதே உயர்ந்த அறிவென்று கொண்டு ஒருவன் வாழ்ந்துவருவானாயின், அவ்வடக்கம்தான் பெரியோர்களா லறியப்பெற்று, உடையார்க்குப் பெருமையை யளிக்கின்றது. அடங்காமையோ எனின், தன்னையுடையவர்க்கு என்று மழியாப் பழியை உலகில் நிலைநிறுத்தி மறுமையில் மிக இழிந்த நரகத்தையே யளிக்கின்றது.

3. இத்தகைய அடக்கம் பல நன்மைகளையும் பயத்தலால், மானிடராகப் பிறந்த எல்லோருக்கும் அவசியமாயிருக்கின்றது. ஒருவன் மிகுந்த கல்விப் பயிற்சியும் பொருளுமுடையவனாயிருந்தபோதிலும் அடக்கமெனும் இச்சிறந்த குணமில்லாதிருப்பனேல், அவனிடமிருக்கும் அச்செல்வங்கள் சிறிதும் பயன்படா.

'கல்வியுடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமும்
தலைவணங்கித் தாழப் பெறின்.'

'எல்லார்க்கு நன்றாம் பணிதல்' என்பன இதுபற்றியே கூறப்பெற்றுள்ளன.

4. பெரியவர்கள் சிறியவர்களிடைப் பட்ட மிதமிஞ்சிய நடத்தைகளைக் கண்டால், பெரிதும் தாழ்ந்து போவார்கள்.

'ஆக்கம் பெரியார் சிறியாரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப'
என்பது யாமறியாததன்றே.

5. நந்நாட்டில் அடக்கத்தாற் புகழுடன் வாழ்ந்தவர்களையும் அஃதின்மையாலழிந்தவர்களையும் பற்றிப் பலவிடங்களிலும் படித்திருக்கிறோம்.

'ஆன்றசபையி லடங்காச் சிசுபாலன்
ஏன்றிரந்தா னன்றோ இரங்கேசா'

அரசர் பலர் குழீஇ இருந்த அவையில் அடக்கமின்றிக் கிருஷ்ண பரமாத்மாவை இழிந்த சேதிபதியாய சிசுபாலன் பலராலும் இகழப்பெற்று இறுதியிற் றன்னுயிரையு மிழந்தானல்லவா? அடக்கமின்மையாலல்லவா இராவணன் தன் குலமுழுதையு மாய்த்துத் தானு மழிந்தான்?

6. முடிவில், பலநன்மைகளையும் நமக்களித்து என்றுமழியாமல் புகழுடம்பையும் அளிக்கும் அடக்கத்தைக் கைக்கொண்டு ஒழுகுவோமாக.

'காக்க பொருளா அடக்கத்தையாக்கம்
அதனி னூங்கில்லை உயிர்க்கு'

இ. ஸ்ரீ. கோவிந்தன், எட்டயபுரம்.

விருந்தோம்பல்

இது இல்வாழ்வார்க்குரியனவாகிய அறங்கள் பலவற்றினுள்ளும் மிகச் சிறந்து நிற்பதோர் பேரறமாம். நம்முன்னோர்கள் இல்வாழ்வார்க்கு இதுபோலுந் தவப்பெருஞ் சிறப்புடையது பிறிதொன்றின்றென்பது கருதியே இதனைத்தொன்றுதொட்டு நடத்திவந்தனர். இச்சிறந்த அறத்தின் பெருமையை இக்காலத்தில் ஆராய்ந்தறிந்து நடத்துவார் சிலரேயாயினர். அச்சிலரும் தமது சுற்றத்தினரையே விருந்தினராக நினைத்து அன்னாரை யுபசரித்தலையே விருந்தோம்பலாகவுங் கருதுகின்றனர். இங்ஙனம் அவர் கருதுகின்றமைக்குக் காரணம் உண்மையை ஆராய்ந் தறியாமையே யாகும்.

பின்னை உண்மை யென்னை யெனிற் கூறுதும்:—'விருந்து' என்னும் பதத்திற்குப் புதுமை யென்பது பொருள். இது ஆகுபெயராய்ப் புதியராய் வந்தாரையுணர்த்தும். ஆகலின், சுற்றத்தாரல்லாதாராய்ப் புதியராய் வருப-

வரே விருந்தினரென்க. தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும் "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக் கறானென்றாங், கைம்புலத் தாறோம்ப றலை" என்ற திருக்குறளில் 'விருந்து' என்பதற்குப் பின் "ஒக்கல்" எனச் சுற்றத்தாரை வேறாகக் கூறியிருத்தலே விருந்தினர் வேறு சுற்றத்தார் வேறு என்பதைத் தெற்றென விளக்கும். அன்றியும் அவரே "விருந்தோம்பல்" என ஓரதிகாரமும் "சுற்றந்தழால்" என ஓரதிகாரமும் தனித்தனி வைத்திருத்தலானும் நன்கறியலாம். தினந்தோறும் வாராது புதிதாக வருதல்பற்றி வடநூலாரும் விருந்தினரை அதிதி யென்பர் (திதி—தினம்).

மேலும், புதியனாய் வருதலினும் "ஓரிரவுவரை தங்கியிருப்பவனையே விருந்தினனாக நினைத்தல் வேண்டும்" என ஆன்றோர் கூறியிருத்தலும் யாவரும் அறிய வேண்டுவ தொன்றாம். தன்னூரினுள்ளானையும், தன் பிழைப்பின் பொருட்டு விகடஞ் செய்வானையும், மனைவியோடு கூடி யிருப்பவனையும், சுற்றத்தானையும், தோழனையும் விருந்தினனாக நினைத்தலொண்ணாது.

விருந்தினர் தத்தம் குலத்தினராகவே இருத்தல் வேண்டுமென்பதோர் நியதியின்று. வேறு குலத்தினராகவும் இருத்தல் தகும். இதனை "அன்னிய தேசத்திலிருந்து ஒரு க்ஷத்திரியன் அதிதியாக வந்தால்" என்றும் "வைசியன், சூத்திரன் இவர் பிராமணன் வீட்டுக்கு அதிதியாக வந்தாலும்" என்று ஸ்மிருதி கூறுவன கொண்டு தெளிக.

இனி விருந்தினர் பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும், அஃதின்மையிற் குறியாது வந்தாருமென இருவகைப்படுவர்.

இல்லற வாழ்க்கையினுள்ளா ரெவருமே விருந்தின்றித் தாமுண்ண நேர்ந்த சோற்றை மருந்தென நினைக்கும் இயல்பினராய் இருத்தல் வேண்டும். தாம் நடத்திவரவேண்டுவனவாய தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐந்தனுள்ளும், முன்னைய தென்புலத்தாரும் தெய்வமுமாய இரண்டும் கட்புலனாகாதாரை நினைந்து செய்வனவாதலானும், பின்னைய ஒக்கலுந் தானுமாய இரண்டும் பிறர்க்குக் கொடுப்பதின்மையானும், சம்பந்தங் கருதிச் செய்தலானும், சம்பந்தங் கருதாது பிறர்க்கீயுமதான நடுநின்ற விருந்தே சாலச் சிறந்ததென அறிதல் வேண்டும். இது கருதியே தேவரும் அதனை நடுநாயகமாய் வைத்ததென்க. வேதமோதலாகிய பிரமயாகமும், ஓமம் வளர்த்தலாகிய தேவயாகமும், விருந்தோம்பலாகிய மானுடயாகமும், நீர்க்கடனாற்றலாகிய பிதிர்யாகமும், பலியீதலாகிய பூதயாகமும் என்ற ஐவகை யாகத்துள்ளும், விருந்தோம்பல் தானுமொன்றாய் நிற்பதன்றி அவைகளுள்ளும் நடுநாயகமாய்ச் சிறந்து நிற்றலும் ஆராயத்தக்கது. மனைவியோடும் வனத்திற் சென்றுறைதலாகிய வானப் பிரத்தாசிரமத்தைவிட்டு இல்லின் இருந்து பொருளைப் போற்றி வாழ்தல் விருந்தினரைப் பேணி அவர்க்குபகாரம் செய்தற்கேயாம்.

விருந்தினர் சேய்மையில் வரும்பொழுதே அவர் வருகையிற் றமக்குள்ள அகமகிழ்ச்சியை வெளியாக்கி, அவரை அணுகச் செய்தற்கேதுவாய முகமலர்ச்சியும், அம் முகமலர்ச்சி பற்றி அவர் அணுகியவழி "வருதல் வேண்டும், இருத்தல் வேண்டும், எத்துணைத் தூரம் நடந்து வந்தீரோ! யாண்டு எப்பொழுது உணவருந்தினீரோ! அறியேனே! மிகுதியும் களைப்புற்றுளீரே, இன்றைக்கெனதில்லத்திலேயே உணவருந்தல்வேண்டும்" என இன்சொற் கூறலும், அவ்வின்சொற்பற்றி உடன்பட்டவழி ஆசனத்திருக்கச் செய்து ஆக்கியவெல்லாம் படைத்துண்பித்தலாகிய நன்றாற்றலுமாகிய இன்னோரன்ன செயல்கள் விருந்தோம்புவார்க்கு முக்யமாக வேண்டப்படுவன. மலர்முகமும், இன்சொற் கூறலும், நன்றாற்றலுமாகிய மூன்றனுள்ளும் முன்னதாகிய மலர்முகமின்றிப் பின்னுள்ளன இருப்பினும் விருந்தோம்பலாகிய கருதிய செயல் கைகூடல் அரிது. ஏனெனில், கடுத்தமுகங் கண்ட விருந்தி

னர் தூரத்திலேயே வாடி நீங்குவராதலான். "மோப்பக்குழையு மனிச்ச முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து" என்ற திருக்குறளும் அதற்குப் பரிமேலழகியார் வரைந்துள்ள "நீண்டியவழி யல்லது வாடாத அனிச்சம்பூவினும் விருந்தினர் மெல்லியரென்பதாம்" என்ற விசேடவுரையும் ஈண்டு நோக்கத் தக்கன. (இன்னும் வரும்)

S. ஆழ்வாரையங்கார்.

தாமரை

"குளத்துக் கணியென்ப தாமரை" தாமரைக் குளத்தைக் கண்ட உடனே நம்மை யறியாமலே ஓர்வித ஆனந்த முண்டாகிறது. பச்சைப் பசேலென்று தோன்றும் தாமரை யிலைகளும், தாமரைப் பூவின் தண்ணியகாட்சியும் பார்ப்பவர் உளத்தைப் பரவசப்படுத்துகின்றன. தாமரைத் தடாகத்திலிருந்து வீசும் காற்று மிகவும் சுகமாய் வீசுகிறது. தாமரை படர்ந்திருக்கும் குளத்து நீர் தெளிந்து குளிர்ந்து இருக்கிறது. அத்தாமரைத் தடாகத்தில் வசிக்கிற தவளைகளும் மீன்களும் செய்த பாக்கியமே பாக்கியம்!

கஞ்சம், கமலம், நளினம், பங்கஜம், பதுமம், புண்டரீகம், வனசம், முளரி, முதலிய பெயர்கள் தாமரையைக் குறிப்பன. தாமரை சேறுள்ள குளங் குட்டைகளில் வளருகிறது. இது இந்தியாவைப்போன்ற உஷ்ண தேசங்களில் காணப்படுகிறது. தாமரைக் கிழங்கு சேற்றில் ஆழமாக ஊன்றி தளிர்க்க ஆரம்பிக்கும். தாமரைத்தளிர் அல்லது குருத்து தண்ணீருக்குள் இருக்கும்போது, வாழைக் குருத்தைப்போல சுருட்டிக்கொண் டிருக்கும். குருத்து நீர்மட்டத்தில் வந்த உடனே இலை விரிந்து வட்டவடிவமாய் பச்சை நிறத்துடன் காணப்படும். தாமரை யிலையில் நெய்ப்பசை யிருப்பதால் இலையில் நீர் ஒட்டாது. தாமரையிலையில் வெண்மையான நீர்த்துளிகள் முத்துகள்போல உருண்டுகொண்டிருப்பதை நாம் பல தடவை பார்த்திருக்கிறோ மல்லவா? சூரியகிரணம் படாதபடியாலும், குளிர்ந்த நீரில் படிந்திருப்பதாலும், தாமரையிலையின் பின்புறம் வெளுத்திருக்கும்.

தாமரையிலையின் காம்புகள், மற்ற இலைகளுக்கிருப்பது போலல்லாமல், மிகவும் நீண்டு வளருகின்றன. தாமரையின் நீண்ட காம்புக்கு 'நாளம்' என்றும், 'தாமரைக்கொடி' என்றும் பெயர். தாமரைக்கொடியை ஒடித்துப் பார்த்தால், அதிலிருந்து நுட்பமான ஒருவித நூல் வெளிப்படுவதன்றி அக்கொடியின் நுனியிலிருந்து அடிவரையில் பல துவாரங்களிருப்பதையுங் காணலாம். நாளம் தாமரைக் கிழங்கினின்றும் தோன்றி தாமரையிலையின் அடிப்புறத்தின் மத்தியில் வந்து சேரும். தாமரைக்கொடி, குளத்தில் நீர் எவ்வளவு அதிகமிருக்கிறதோ அவ்வளவு நீளமாக வளர்ந்து இலையை நீர்மட்டத்தில் கொண்டு வந்து விடும். அவ்விதம் வளர்ந்து இலையை நீர்மட்டத்தில் கொண்டுவராவிட்டால், இலை நீரினால் மூடப்பட்டு, செடிக்கு இன்றியமையாத கரிவாயுவையும் சூரிய காங்கையையும் பெறமுடியாமல் வளங்குன்றி, கடைசியில் செடி பட்டுப்போம்.

தாமரைமொட்டு (மொக்கு) நாளத்தினால் தண்ணீரின் மேற்புறம் கொண்டு வரப்பட்டு முதிர்ந்தவுடன் மலரும். காலையில் சூரியன் உதிக்கும்போது மலர்ந்து சூரியன் மறையும்போது கூம்புவது தாமரைப்பூவின் இயற்கை. இதனால் தாமரைப்பூவிற்கும் சூரியகிரணத்துக்கும் நெருங்கிய சம்பந்த முண்டென்று தெரிகிறது. பண்டைக் காலத்திருந்த தமிழ்ப்புலவர்கள் தாமரையைச் சூரியனுடைய மனைவியாகப் புனைந்

துரைத்து, காலையில் சூரியன் உதிக்கும் போது தாமரை மலர்வதை தாமரை யாகிய பெண் சூரியனைக் கண்டு நகுவது போலிருக்கிறதென்றும், மாலையில் கூம்புவதை தாமரையாகிய அப்பெண் சூரியன் மறைந்ததைக் கண்டு வருந்துவது போலிருக்கிற தென்றும் உபமானங் கூறியிருக்கிறார்கள்.

தாமரைப் புஷ்பத்தில் ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட இதழ்கள் உண்டு. புஷ்பத்தின் மத்தியில மஞ்சள் நிறமுள்ள 'காய்' ஒன்று உண்டு. அதற்குத் தா 'மரைக்காய்' என்று பெயர். தாமரைமலர் அலர்ந்திருக்கும் போது அதிலிருக்கும் (புஷ்பத்திலிருக்கும்) தேனை யுண்பதற்காகப் பல வண்டினங்கள் வருவதுண்டு. தேனீக்கள் அதிலுள்ள தேனையும் மகரந்தப்பொடி என்னும் வாசனைத்துகளையும் சேகரித்துக் கொண்டு போகின்றன. சில சமயங்களில், மாலைக்காலத்தில், வண்டுகள் மலரில் அமர்ந்து தேனை யுண்ணும்போது இதழ்கள் குவிந்து மலர் கூம்பிவிடும். உள்ளகப் பட்டுக்கொண்ட வண்டுகள் வெளிவரமுடியாமல் அன்றிரவு முழுவதும் அம்மலரினுள்ளே உறங்கிக் கிடக்கும். மறுநாட் காலையில் சூரியன் உதிக்கும்போது கூம்பிய மலர் அலரும். அப்போது உறங்கிக்கிடந்த வண்டுகள் தூக்கந்தெளிந்து ரீங்காரம் செய்துக்கொண்டே வெளியே பறந்துபோய்விடும். தாமரைப்புஷ்பம் மலர்ந்த சில நாட்கள் வரை வாடாமலிருக்கும். பிறகு இதழ்கள் முதிர்ந்து உதிர்ந்துபோய் விடும். இதழ்கள் உதிர்ந்தபிறகு, மலரின் மத்தியிலிருந்த தாமரைக்காய் மாத்திரம் நாளத்தில் ஒட்டிக்கொண்டு நாளுக்கு நாள் பருக்க ஆரம்பிக்கும். தாமரைக்காய் முதிர்ந்துவிட்டால் அதன் மஞ்சள் நிறம் போய் பச்சைநிறமடையும். நன்றாய் முதிர்ந்த தாமரைக்காய் ஏறக்குறைய உள்ளங்கை அளவாகவிருக்கும். அதன் தோற்றம், மேல்புறம் வட்டமாயும் அடிப்புறம் ஊமத்தம் பூவைப்போல் குப்பியைப்போற் குறுகியும் காணப்படும். தாமரைக்காயை யுரித்தால், அதில் நிலக்கடலைப் பருப்புப் போன்ற அல்லது நேர்வாள விதையைப்போன்ற விதைகள் காணப்படும். அவ்விதைகளுக்குத் 'தாமரைமணி' என்று பெயர். தாமரைமணியைத் தாவடம் போல் கோர்வைசெய்து (அனேகமாய் வைஷ்ணவர்கள்) அணிந்துகொள்ளுகிறார்கள்.

தாமரைமலர் மிகவும் அழகானது. அதை விரும்பாதவர் உலகத்திலில்லை. அதன் அழகையும் மென்மையையும் எடுத்துச் சொல்ல நம்மால் இயலாது. ஓர் அழகிய பெண்மணியின் இயற்கையழகை விளக்கப்புகுந்த ஒரு தமிழ்ப் புலவர், அப்பெண்மணியின் முகம், அப்பொழுதுதான் மலர்ந்த செந்தாமரைப் புஷ்பத்தைப் போலிருக்கிறது என்கிறார்.

தாமரையில் செந்தாமரை, வெண்டாமரை, கருந்தாமரை அல்லது குவளை என்று மூன்று இனங்களுண்டு. செந்தாமரையின் இதழ்கள் கண்ணைக் கவரும்படி ஓர்வித அழகிய சிவந்த நிறமுடையது. செந்தாமரையின் இதழ்கள் சிவந்திருந்தபோதிலும், இதழ்களின் அடிப்பாகம் வெளுத்து இருப்பதால் அப்புஷ்பம் பின்னும் அழகாய்க் காணப்படுகின்றது. செந்தாமரை மலரில், திருவின்செல்வி எனப்படும் இலக்குமி வாசம் செய்வதாக நமது புராணங்கள் பேசுகின்றன. வெண்டாமரைப் புஷ்பம் தூய வெண்ணிறமுடையது. உலகங்களைப் படைக்குங் கடவுளாகிய நான்முகன் (பிரமதேவன்) வெண்டாமரையில் அமர்ந்து இருக்கிறாரென்றும், அவர் மனைவியாகிய கலைமகள் என்னும் சரசுவதி வெண்டாமரையில் வசிக்கிறாளென்றும் நாம் புராணங்களில் படித்திருக்கிறோம்.

கருந்தாமரை அல்லது குவளைமலர் நீலநிறமுடையது. ஆகவே அது நீலத் தாமரை என்றும் வழங்கப்படுகிறது. இது மிகவும் அழகான மலர். இம்மலர் சிற்சில விடங்களிலன்றி விசேஷமாகக் காணப்படுவதில்லை. சாமனுக்குச் சகோதரனாகிய காமன் என்னும் காதற் கடவுளுக்கு, அவனது ஐந்துவித புஷ்ப

பாணங்களில் குவளை மலரும் ஒன்று என்பது புராணக்கதை. தமிழ்ப் புலவர்கள் மைந்தர் மனதைக் கவரும் மங்கையர் கண்களை குவளை மலருக்கு உபமானம் கூறி யிருக்கிறார்கள்.

பொதுவாக, செந்தாமரை வெண்டாமரை குவளை யென்னுமிம் மூவகைத் தாமரைகளும் பூசைக்கு மிகவும் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றன. மங்கலகரமான இந்த மலர்களால் கடவுளை யருச்சித்துப் பூசிப்பது மிகவும் சிறப்பானது.

தாமரைக் கொடியின் சமூலம் (கிழங்கு, கொடி, இலை, புஷ்பம் முதலியவை) சில கியாழங்களில் சேர்க்கப்பட்டு மருந்தாக உபயோகப்படுகிறது. தாமரைப் பூவிலிருந்து 'ஷர்பத்' என்னும் பானகம் செய்து சாப்பிடுகிறார்கள். அது செய்யப்படும் விதம் : தாமரைப் பூவின் இதழ்கள் பதின்மூன்று பலம் எடுத்து, சுத்த ஜலம் ஐம்பது பலத்தில் அவ்விதழ்களைப்போட்டு அடுப்பில் வைத்து ஜலம் பாதி சுண்டுகிறவரையும் காய்ச்சியெடுத்துக்கொண்டு வடிகட்டி ஜலத்தை எடுத்துக்கொள்ள வேண்டியது. அந்த நீரில் சீனி சருக்கரை இருபதுபலம் சேர்த்து மறுபடியும் அடுப்பில் வைத்துக்காய்ச்சி மதுபாகத்தில் இறக்கி வைத்துக்கொள்ளவேண்டியது. இந்த ஷர்பத்தை தேவையானபோது ஒன்று அல்லது ஒன்றரைபலம் சுத்தஜலத்துடன் கலந்து சாப்பிட்டால், சூட்டினால் உண்டான தலைவலி, பித்தவாந்தி, வரட்சியினால் உண்டான இருமல், மார்புவரட்சி, விலாவீக்கம், நுரையீரலின் வீக்கம் முதலிய நோய்கள் குணப்படும். அன்றியும் மலத்தை இளகச் செய்யும்.

இத்தாமரை இதழ்களிலிருந்து, தாமரைப்பூ திராவகம், தாமரைத் தீநீர் முதலான அவுடத பாகங்களைச் செய்து அனேகமாய் மேற்கண்ட வியாதிகளுக்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

சம்பங்கி, மல்லிகை முதலிய புஷ்பங்களிலிருந்து வாசனை எண்ணெய் இறக்குகிறதைப் போலவே தாமரைப் பூவிலிருந்தும் எண்ணெய் இறக்குகிறார்கள். சூட்டைப்பற்றிய தலைவலிக்கும், சூட்டைத் தணிவிப்பதற்கும் அவ்வெண்ணெயை வுபயோகப்படுத்துகிறார்கள். அந்த எண்ணெய் நித்திரை யற்றவர்களுக்கு நித்திரை யுண்டாகச் செய்யும் என்று வைத்திய சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

சிலர் தாமரைக் கிழங்கைத் தின்கிறார்கள். தாமரையிலையை போஜன பாத்திரமாக உபயோகப்படுத்துகிறார்கள். சூடான உண்டி உணவுகளைத் தாமரையில் படைத்தால், இலையிலிருந்து ஓர்வித துர்நாற்றம் கிளம்பி படைக்கப்பட்டவைகளைக் கெடுத்துவிடுகிறது.

மாரிகாலத்தில் தாமரைப் புஷ்பங்களற்று இலைகள் கருகி வளங்குன்றி விகாரமாய் காணப்படும். ஆனால் வேனிற்காலத்தில், தளிர்த்துத் தழைத்துப் பூத்துச் செழித்து வளர்ந்து பார்க்கப் பதினாயிரங் கண் வேண்டியிருக்கும்.

ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான், தாம் அருளிய தெய்வத் திருவாசகத்தில், 'செழித்து வளர்ந்த தாமரைப் புதரில், இலைகள் தெரியாதபடி முழுவதுமழகிய செந்தாமரைப் புஷ்பங்களமர்ந்திருந்தால் எவ்வித காட்சியாயிருக்குமோ அத்தகைய திருமேனியையுடைய சுடரைப்போன்று பரிசுத்தமான எந்தையே' என்று பொருள்படும் 'செந்தாமரைக்காடனைய மேனித் தனிச்சுடரே!' என்று சுருக்கமாகவும் தெளிவாகவும் அருளினார்.

தாமரையில் இன்னும் பல இனங்கள் உண்டு. அவை அல்லி, அந்தரத்தாமரை, அல்லி அல்லது ஆகாயத்தாமரை, ஓரிதழ்த் தாமரை முதலியன. அவை தாமரையைப்போல அவ்வளவு பிரபலமானவையல்ல. அல்லியில் தாமரையைப்போலவே சிவப்பு, கறுப்பு (நீலம்) வெள்ளைப் புஷ்பங்களுண்டு. அல்லிப் புஷ்பம் தாமரைப் புஷ்பத்தைவிட சிறியது. அல்லியின் இலை நீர்ச்சேம்பு இலையைப்போல இருக்கும். அல்லியும் அவுடதங்களுக்குப் பயன்படுகிறது.

தாமரையைப் பற்றிய தமிழ்த் தேசத்துச் சித்தர்களின் கருத்து வருமாறு:

தாமரைக் குளத்து நீரின் குணம் :

‘ தண்டாமரைக் குளத்திற் றங்குபுனலதனால்
உண்டாகும் வாதபித்த மூண்மையே --பண்
[டான
வெக்கைநோய்மாறுது; வீறுந்தவனமுமாம்
மைக்கருங்கண்மாதே ! வழுத்து.

தாமரைக் கிழங்கின் குணம் :

‘ கண்ணுக்கொளி கொடுக்குங்; காசபித்தம்
[போக்கும்;
எண்ணுங்குளிர்ச்சிதரும் ஏந்திழையே !—
[புண்ணுகளில்
‘*தூ*மரைப்புண்ணும் போக்கும் ; சொந்தி
தாமரைக் கந்தமதுதான் [கடிப்பகற்றும்;

* தூ = ஊன், மாமிசம். * மரைப்புண் = தவ
[ளைப்புண்.

தாமரைப்பூவின் குணம் :

‘ பருத்த நற்றாமரைப்பூ பல்வார்துநோயைத்
தூரத்திவிடும். இன்னுஞ்சொலவோ!—கரத்
[தில்
எடுத்தணைக்கக் கண்குளிரும்; ஏகுஞ்சுரமும்
எடுத்தவிதாகமும் போம்; எண்.’

தாமரையிலையின் குணம் :

‘ தாமரைப்பன்னத்தி லுண்டால், தாங்கரிய
[உட்டிணமாம்;
காமவாதனஞ்சினந்து நண்ணுங்காண்;—
[தாமமுறு
அக்கினிமந்தங்களுண்டாம்; அன்றேமலர்த்
[திருவத்
திக்கினிலிராளென்றே தேர்.’

மயிலை. சீனி. வேங்கடசாமி.

சந்திரமதி

(வி. சேஷகிரி சாஸ்திரி அவர்கள் B. A. எழுதியது)

(104-ம் பக்கத் தொடர்ச்சி)

மறையவர் கூறிய அச்சந்திரமதியின் பேரழகைப்பற்றி அவர் கூறிய மொழிகள் ஒவ்வொன்றையும் அவன் எண்ணுவன்; அவற்றை நினைக்கும்போதே மனத்துள் இன்பமும் துன்பமும் ஒருங்கே வளரத் தியங்குவன்; அவ்வழியைப் பெறும் பேறு தனக்குண்டோவென ஐயமுறுவன்; அரசர்க்கரசாகி முடிவேந்தர் தன்னைப் பதம் வீழ்ந்து வணங்கும் பரம வீரனாகிய தான், ஓர் பெண்ணை நினைந்து வருந்துவதாவென மனங்குன்றுவன்; சிந்தனை தேங்குவன்; தன்னைத்தானே சலித்துக்கொள்வன்; ‘வீரங் கடந்த தன்னை ஓர் பேதை—பெண்—வருத்துவதா—ஈது அகோ! பெரும் ஸாஹஸம்’ எனத் தன் மீசை துடிக்க, உதடைக் கடித்துச் சிரிப்பன்; ‘இது அடாது’, என இறைவன்; மனம் புகைவன்; காமநோய்ப் பட்டவர் படுபாட்டை அன்றே கண்ட அவன் ‘அது அடக்கொணாது; விரிக்கொணாது’ என உளறுவன், மனம் தளர்வன், சிற்சில சமயம் தான் பேசுவது இன்னதென அறியாது பேசுவன்; தன்னெதிரில் சந்திரமதியிருப்பதாக நினைப்பன்; அவளை முன் காணாதிருந்தும் கண்டதைப் போல நினைத்து அழைப்பன்; தன்னிடம் காதல் தலைக்கேற உள்ளம் குழைவன்; மனத்துக்கண் தோன்றும் அளவற்ற ஆசைப் பெருக்கை வெளிவிட முடியாது இதயம் துடிப்பன், பொறுக்க முடியாக் கோபங் கொண்டவன் போலப் பல்லை நெறுநெறெனக் கடிப்பன்; ஓர் பெண்ணை நினைத்து தான் வருந்துவது தருமமாவெனத் தன்னைத் தானே கேட்டுக்கொள்வன்; அவ்வாறு செய்வது நெறி தவறாத மன்னர்க்குத் தகுமா? புகழ் தருமா?’ எனத் தன்னையே பழிப்பன்; தன் செய்கை பிறர் வசைகூற இடம் தருமென மதிப்பன்; விதியின் கொடுமையை நினைந்துள்ளம் பதறுவன்; தன் வீரமெங்கு? தனது ஆற்றல் எங்கு? என மயங்கி யிரு கரங்களையு முதறுவன்; “அப்பெண் ஸாஹஸம் என்னே!” என மயங்குவன்;

“தொட்ட கடல்உலகம் யான்காவல் சூழ்ந்த
[அன்று

தொட்டுச் சுகமின்றித் தேய்ந்ததின்றே— [மட்டவிழ்தார்க்
கூழைமட மாதினுன்றெம் ஆவிகள்ளங் [கொண்டதுதான்
ஏழைமையே மானா எமக்கு"

என மனம் அயர்வன்; பொறுக்க முடியாத் துன்பத்துள் ஆழ்ந்து துடி துடிப்பன்; சந்திரமதி என்னும் பெயரை நினைக்கும்போதே உடல் கம்பிக்க உள்ளம் விம்முவன், ஏங்குவன், படத்திலெழுதிய ஓவியமென உயிரற்ற மரமொப்ப விருப்பன்; சிந்தனையே திரண்டு விழிப்பன்; செந்தழலிற் பட்ட எறும்பென உளம் கரிவன்; ஆசை நோய் பாய்ந்து இன்பக் கனவிலாழ்ந்து இடையிடையே புன்சிரிப்புற்று ஏமாந்து கிடப்பன்; தன் காதற்கனி கண்ணெதிரே விளங்குவதாக வெண்ணி இன்புறுவன்; தன் கருத்து நிறைவேறுமென உள்ளங் களிப்பன்; 'என் வலது தொடை துடித்தது என் பாக்கியம்' என்று கூக்குரலிட்டு இடையிடையே கூத்தாடுவன்; முனிவர் கூறிய மொழியை நினைப்பன்; நன்மையே வருமென எண்ணுவன்.

இவ்வாறு மயங்கி மயங்கி, இடையே தன் நினைவு வரும்போதெல்லாம் அவன் 'ஹா! ஹா!'; என் உள்ளம் விம்முவன்; பெருங் கஷ்டத்துட் பட்டவன் போலப் பதை பதைப்பன்; நடுவில் தான் எண்ணுவது வீணாமோ என அச்சம் அடைவன, தன்னை அவள் மதியாதிருந்திடுவளோவென ஏக்கமுறுவன். இந்த ஏக்கமுற்றதும் அவன் முற்றும் அவசமானான். தனது காரியம் ஈடேறுமோ ஏறாதோ என்னும் சந்தேகம் அவன் மனதைக் குடைந்துகொண்டேயிருந்தது. அவன் அறிவு அவனை அவ்வாறு சிந்தனையிலாழ்வது தாழ்வெனத் தூண்டும், அவன் வீரம் அவனை அவளை அடையாதிருத்த லழகோவென எதிர்க்கும். அவன் மானம் எண்ணங்களை வெளியிட ஒண்ணாது தடுக்கும். அவனது நல்லொழுக்கம் தவறான வழியில் மனத்தை ஓட விடாதிருக்க எச்சரிக்கும். எனினும் அக்காம சிந்தனை அவனை இன்பக் கனவிலாழ்த்தி துன்பத்தையே வளர்த்து வந்தது. காம நோய்க்கு—அதற்கு அதுவே மருந்து என்பதைப் படித்தறிந் திருப்பினும் அனுபவத்தில் அறிந்ததின்றே யன்றோ!

எனவே அவன் ஐம்புலக் குதிரைகள் இழுத்தவண்ணம் காமக்காட்டில் பள்ளமேடு என்னுங் கவனமின்றி மனத்தேரை ஓட்டிக்கொண்டே யிருந்தான். இடை இடையே தோன்றும் நல்லெண்ணங்களென்று காட்டாறுகளை, மனத்திலெழும் ஆனந்தம் உதஸாகமென்னும் அணைகளால்தாண்டி அவன் அத்தேரைக் கனவேகமாகவே நடத்திக்கொண் டிருந்தான். அப்போது சந்திரமதியைத் தன் கண்ணெதிரே கண்டதாகவே நினைத்து, தன் நினைவால் தன்முன் தோன்றும் அவளது உருவெளியோடு பேச நினைப்பன்; நாவெழாது குழறுவன்; உடல் வெயர்ப்பன்; உள்ளம் சலிப்பன்; வார்த்தை எழாது விக்குவன்; முழு விசையுடனும் உறத்துப் பேச முயல்வன்; கண் விண்டு கலங்கித் தன் உள்ளக் கருத்தை வெளியிட முடியாது தளறுவன், தயங்குவன்; கைகளாற் சைகை செய்வன்; உடல் முழுதும் மயிர் அரும்ப உளம் வெள்குவன்; தனது செய்கையை நினைத்துத் தளருவன்; தன்னைத்தானே தேற்றிக் கொள்வன்; ஒருவாறு பேச யத்தனிப்பன்; 'சந்திரமதி' என அழைக்கு முன்பே உடல் கம்பிக்க அச்சமுறுவன்; தன்னை யாராவது கண்டிடுவரோவென நாணுவன்; நாவைக் குழைத்துப் பேச வரும்போது தொண்டை எழும்பாது அயர்வன்; 'அகோ சந்திரமதி!' எனத தனக்கும தெரியாது தன் கண்களைக் கெட்டியாக மூடிக்கொண்டு உச்சம்பெறக் கூவுவன்; 'நீ செய்வது நீதமோ' என்பன்; 'மறைவரோடு வந்த நீ, அவர் மறைய நீயும் மறைந்தாய் போலும்!' எனக் கேட்பன்; 'என் உள்ளத்தையே கவர்ந்து சென்றனையே! இது பெரியோர் குலத்துதித்தாட்கு தகுமோ?

"திங்கள் வழிவந்த திறற்சந் திரதயன்றன்
பொங்குதவத் தூற்பவித்த பூங்கொடியே—
[இங்கு
வடுப்பிறக்குஞ் செய்கை மனமுவந்து வான்
குடிப்பிறந்தார் செய்குவரோ கூறு?" [றேய்

என் வினவுவன்; 'நீ செய்வது அடாது; அது முறையன்று. உள்ளத்தை விற்க வாராமுன் அதைக் கேளா தெடுத்தோடல் பெண்டிர்க்கழகன்று. அது மறவர் செய்கை. அவ்வாறு செய்வது உன் குலப் பெருமையையே போக்குமன்றோ? எனவே என் உள்ளத்தோடதை எனக்குத் திருப்பலே அத்தவறுக் கேற்ற தண்டனை. அதைச் செய்யா தொழியற்க.' எனத்தானே அவளோடு வாதாடுவதாக எண்ணி வாய்மொழி தருவன்; இக்கனவிலேயே ஆழ்ந்து மயங்குவன். படுக்கையிற் கிடந்த வண்ணமே புரளுவன்; தளருவன ; உடல வாடுவன் ; தன்னிரு கரங்களையும் தலைமேற் சூடுவன், 'என் ஐயனே! என் எண்ணத்தை நிறைவேற்றுக' என்ன கண்ணீர் விட்டுக் கதறுவன்; பதறுவன்; உடல் இளைப்பன் ; மனஞ் சலிப்பன் ; நெஞ்சமுருகக் களைத்து மயங்குவன் ; நெட்டுயிர்ப்பு விட்டு ஏங்குவன் ; காமக் கனற் குண்டத்திற் குளித்து,

மாழாந்தான் உள்ளம் வருந்தினான் மெய்தள
[ர்ந்தான்
காழார்ந்த காமக் கருங்கனலசல்—வீழாவி
சோர்ந்துசெய லற்றான் சுடர்மெழுகிற்செருக்
[குருகி

செய்வதிற்றென அறியாது புரண்ட வண்ணமாக இரவு முழுதும் துயரப் பாயலில் கண்விண்டு கருத்தழியா தழிந்து லோக உணர்வற்றுக் காமத் தவஞ் செய்வான் போலக் கிடந்தான்.

(தொடரும்)

திருக்குறள் நாடகம்

மயிலை சீனி கோவிந்தராஜன் அவர்கள் எழுதியது

களவியல் (142-ம் பக்கத்தொடர்ச்சி)

இவ்வாறு தன் எண்ணத்தில் மூழ்கித் தலைமகன் நிற்கின்றான். தலைமகள் சற்றே விலகிச் செல்கின்றாள். அதுபொழுது தோழி, தலைமகனைப் பார்த்து தருமம் உரைக்கின்றாள்.

தோழி:—" ஐய! இனி இவ்வொழுக்கத்தை மறந்துவிடுங்கள். இவளை இப்பொழுதே மணந்துகொண்டு வாழுங்கள்—இல்லத்தி லிருந்து இல்லறம் நடத்துங்கள். இதுவே உலக தருமம். எல்லா இன்பமும் எஞ்சாமல் அடையலாம்! "

த-ன்:—"அரிய மாமை நிறத்தையுடைய அரிவை—உன் தோழியின் முயக்கம் இவ்வுலகத்தின்பம் ஒன்றைமட்டுமோ தருகின்றது? பேரின்பத்தையும் தருகின்றதே!—இல்லத்தில் இருந்து முயற்சியினாலே பொருளைத் தேடுவர்; தேடிய பொருளைத் தென்புலத்தார் தெய்வம் விருந்து சுற்றங்களுக்குப் பகுதத்துத் தாமும் உண்ணுவார் ; இதுவே இல்வாழ்வார் இயற்றுகின்ற அறம்! இவ்வறத்தால் அவர் அடைவது துறக்கத் தின்பம்; இவ்வின்பத்தையும் உன தோழி முயக்கமே அளிக்கின்றதே! இன்னும் மணக்கவும் வேண்டுமோ? நங்காய்! " 1107

தோழி:—"ஐய! நீங்கள் இருவரும் ஒத்த அன்புடையோர். உங்களுக்கு ஒருபொழுதும் இடைவிடாத முயக்கம் அல்லவோ இனிது? அம்முயக்கம்—"

த-ன்:—"நல்லாய்! நீ சொல்லுகின்றது ஒக்கும்! ஒருவரை ஒருவர் விழைகின்றவராகிய இருவருக்கும் காற்றாலும் இடையறுக்கப்படாத முயக்கம் இனியதே! ஆனால், இங்கே இருவர் இல்லையே! காக்கையின் கண் இரண்

டிற்கும் கண்மணி ஒன்றே ஆனாற் போல உடம்பு இரண்டும் உயிர் ஒன்றும் அல்லவோ நாங்கள் ? அதனால், மணத்தல் வேண்டுமோ?'' 1108

தோழி:—"வேண்டாமா? ஐய! மணந்து கொண்டால், மறைத்தல் வேண்டா. இடையறாமல் கூடி வாழலாம். இடையறவு இல்லாத கூட்டம் இன்பப் பயன் உடைத்தல்லவோ?—

த-ன்:—"உடைத்தோ, அன்றோ, அது எங்களுக்கு வேண்டா. மணந்து கொண்டு காமத்தை இடைவிடாமல் எய்தியவர் பெற்ற பயன்கள் என்ன? ஊடலும் உணர்தலும் கூடலும் தானே?—இதுவன்றி வேறு உண்டா? ஆடவர் பரத்தையரிடம் பிரிவார். அதை அறிந்து மகளிர் ஊடி நிற்பார். அவ்வூடலை, தவறு செய்த ஆடவர் தாமே, தமது தவறின்மை கூறி அளவறிந்து அகற்றுவார். பின்பு அவ்விருவரும் ஒத்த அன்பினராய்க் கூடுவார். இவ்வளவுதானே மணந்தவர் பெற்ற பயன் ? நங்காய் ! அப்பயன் எங்களுக்கும் வேண்டுமோ? இருதலைப்பறவையின் ஓருயிராகிய எங்களுக்கும் வேண்டுமோ? உழுவல் அன்புடைய எங்களுக்கும் வேண்டுமோ?'' 1109

—நாள்.

7. பகற்குறி.

களம்:—குறிஞ்சியில் ஒரு பொழில்.
காலம்:—கூதிரில் ஒரு பகல்.
கூத்தர்:—தலைமகன், தலைமகள், தோழி.

சேட்படுத்தியும் செல்லானாகிய தலைமகன் பின்னும் பின்னும் தோழியைச் சார்ந்து, தன் குறை முடித்துத் தரும்படி இரந்தான். அவன் இரத்தலைக் கேட்டு, அவள் மனமிறங்கினாள். இரங்கி "இன்ன இடத்து வருக'' என்று அவனைக் குறிப்பினால் உணர்த்தினாள். அவனும், அவள் குறித்த இடம் சென்றிருந்தான்.

தலைமகனுக்குக் குறியிடம் கூறிப் பிரிந்த தோழி, தலைமகளிடம் போய், அவளைப் பொழிலிடம் கொண்டுவந்து நிறுத்தி "அன்னாய்! நான் போய் உன் குழலுக்கு மலர் கொய்து வருவேன். அவ்விடம் உன் மெல்லடி பொறாத கல்லிடம். உன்னால் வரப்படாது. நான் திரும்புமளவும் நீ இவ்விடம் நில்லு'' என்று சொல்லி நீங்கினாள். நீங்க, தலைமகள் தனியே நின்றாள். நின்றவளைத் தலைமகன் எதிர்ப்பட்டுச் சார்ந்தான். சார்ந்தும், குறிப்பறியாமல் அவளைத் தீண்டுதற்கு அஞ்சி அவள் நலத்தைப் புனைந்து நயக்க உரைக்கின்றான்.

த-ன்:—(அவள் பூவணியைக் கண்டு) "அந்தோ ! இதென்ன !—எவ்வளவு பேதை இவள்? தன் மென்மையைத் தானே அறிய இல்லை—கொஞ்சமும் அறிய இல்லை ! ஐயோ ! அனிச்சம் பூவை முகிழ் களையாமல் முடித்திருக்கின்றாளே ! ஆ ! இவள் இடை தாங்குமா?—இந்த முகிழ்ப்பாரம் பொறாமல், இதோ! இடை முறிந்தது முறிந்தது ! ஆம். முறிந்தேவிடும் ! முறிந்தால், அதற்குச் செத்தார்க்குக் கொட்டும் நெய்தற் பறையும் வேறு வேண்டுமோ? வேண்டா. இடை முறியும் ஒலியே பறை ஒலியும் ஆகுமே!'' 1115

தன் முன் நின்று தன் நலத்தைப் பாராட்டக் கேட்ட தலைமகள் நாணம் வந்து முகம் புதைத்தாள் 'உன்முகம் புதைத்தால், என் அகம் பதைக்குமே!' என்று சொல்லிச் சூளுறுவான் போல அவள் தோளைத் தீண்டித் தலைமகன் தழுவினான். தழுவியபின், புணர்ச்சியின் மகிழ்ச்சியைப் புகழ்ந்துரைக்கின்றான்.

த-ன்:—"பூங்குழலாய்! உன் பொன்னந் தோள்களை என்ன சொல்வேன் ? எப்பொழுதும் பெற்றுத் தழுவினும் இன்பம் செய்கின்றதே ! புதியன போல நெஞ்சம் பிணிக்கின்றதே ! ஆ! என்ன இன்பம்! என்ன இன்பம்!—மிகவும் இனியவாகிய இன்பொருள்கள் நமக்கு, அந்த இன்பொருள்களை நாம் எய்தப் பெற இல்லை ; ஆனால், அவற்றின் மேல் விருப்பம் மிகுந்திருக்கின்றோம்; அந்

தப் பொழுதிலே, அந்தந்தப் பொருள்களை வந்துவிட்டால், ஆ! அது எவ்வளவு இன்பம் செய்யும்! அந்த இன்பத்திற்கு எல்லை உண்டா?—அதுபோல அல்லவோ உன் தோள்கள்! 1105

—"பேதாய்! உன் தோள்கள் அமிழ்தினால் செய்யப்பட்டனவோ? என்ன! உன்னைத் தீண்டத் தீண்ட என் உயிர் தளிர்க்கின்றதே!—இன்பத்தால் தழைக்கின்றதே! ஆம். உண்டால், உயிர் தளிர்க்கச் செய்யும் அமிழ்தம் ஒன்று உண்டு. உன் தோள்கள், இதைக் காட்டினும் இனிமையான அமிழ்தத்தினாலே செய்யப்பட்டுள்ளனது! தீண்டினால், உயிர் தளிர்க்கச் செய்யும் அமிழ்தத்தினாலே செய்யப்பட்டுள்ளன! அல்லவா? அல்லாவிட்டால், என் வாடிய உயிரைத் தளிர்க்கச் செய்யுமோ?" 1106

இவ்வாறு தன் ஆராமை பற்றிப் பாராட்டிய தலைமகன் அவளைப் பிரியக் கருதி தன் காதற் சிறப்பினைக் கட்டுரைக்கின்றான்.

த-ன்:—"ஆயிழாய்! கூடும்போது, எனக்கு நீ வழி நிற்கின்றாய்!—வேற்றுமையின்றி விரவுகின்றாய்! நீங்கும் போது வருத்தம் செய்கின்றாய்! அதனால், நீயும் நானும் உயிரும் உடம்பும் தானோ? உயிருக்கு உடம்போடு கூடியபோது வாழ்தலும் உண்டு. உடம்போடு நீங்கியபோது சாதலும் உண்டு. வாழ்வையும் சாவையும் நீயே எனக்குத் தருகின்றாய்.—உன்னைப் பிரிந்தும் ஆற்றுவேனோ? ஆற்றேன்! ஆற்றேன்!!" 1124

—பெயர்கின்றான்.

தனியளாய் நின்ற தலைமகளிடம் தோழிவந்து தான் கொண்டுவந்த மலர்களைக் காட்டி, அவளை அழைத்துக் கொண்டு அகல்கின்றாள்.

—நாள்.

8. இரவுக் குறி.

களம்:—குறிச்சியில் தளைமகள் இல்லைச் [சார்ந்த ஒரு பொழில்.

காலம்:—கூதிரில் ஓர் இரவு.

கூத்தர்:—தலைமகன், தலைமகள், [தோழி.

பகற்குறி புணர்ந்து விலக்கப்பட்ட தலைமகன், பின்னும் அக்களவொழுக்கத்திலேயே விருபபம் வைத்து, தோழியை எதிர்ப்பட்டு "நங்காய்! இன்றை இரவு நான் உங்கள் சீறூர்க்கு விருந்து வந்தேன். என்னை ஏற்றுக் கொள்ளாயோ?" என்று வேண்டினான். அது கேட்ட தோழி, "ஐய! இரவிலே எங்கள் ஊரார் சந்தனச்சாந்து அணிவார்; சுனைக்குவளை சூடுவார்; வேங்கைப் பொழிலிலே விளையாடுவார். அவர்களைப்போலககோலம் செய்துகொண்டு வாருங்கள். அப்பொழுது உங்களை ஒருவரும் ஐயப்படார்!" என்று குறியிடம் கூறினாள். அவனும், அவள் சொன்னபடியே அணிந்தும் சூடியும் அவ்விடம் சென்று நின்று, தன் வரவினைத் தோழியும் தலைமகளும் அறியும்படி மயில் எழுப்பினான். அவன் மயில் எழுப்பக் கண்ட தோழி, தலைமகளை நோக்கி, "அன்னாய்! மயில் எல்லாம் துயில் ஒழிந்து அகவுகின்றது. இதற்குக் காரணம் கண்டு வருவோம்; வா!" என்று சொல்லி அழைத்துக்கொண்டு பொழிலிடம் வந்து புகுந்து, "அம்மா! உன் குழலுக்கு மலர் தருவேன்; இங்கே நில்லு." என்று அவளை அவ்விடமே நிறுத்திவிட்டு அகன்றாள். அகல, தனியே நின்ற தலைமகளைத் தலைமகன் தலைப்பட்டுத் தழுவினான். தழுவியபின், அவள் மடியின்மேல் தன் முடியை வைத்துச் சாய்ந்து கிடந்து, அவள் நலம் புனைந்துரைத்து நயக்கின்றான்.

த-ன்:—(வானத்தை நோக்கி, தலைமகள் முகத்தையும் நோக்கி) "என்னே! இந்த வானத்து மீன்கள! அவ்வளவும் அறிவே இல்லை! அங்கும் இங்கும் அலைகின்றன; பார். தங்கள் நிலையிலே நிற்கின்றனவா?—மடந்தாய்! உன் முகத்தைக் கண்டு, தங்கள் மதியமென்றே மயங்கிவிட்டன! ஆம்! அதனாலேதான் ஓர் இடத்திலே நிலையாமல் ஓடித் திரிகின்றன! அந்த

மதியத்திற்கும் உன் முகத்திற்கும் வேறுபாடு பெரிதாய் இருக்கவும், ‘இது மதி; இது முகம்’ என்று அறிய மாட்டாமல், ஆ! இந்த மீன்கள் அலைகின்றனவே!’—ஆமாம்! கலங்காமல் ஓர் இடத்தே நிற்பனவானால் ‘இது மதி; இது முகம்’ என்று அறிய முடியும் இம்மீன்கள், ஓர் இடத்தே நில்லாமல் இயங்குவன அல்லவா? இவையும் இந்த வேறுபாட்டை அறிய முடியுமா? 1116

—“ஏ! அறிவே இல்லை—சிறிதும் இல்லை இம்மீன்களுக்கு! இவற்றின் மதியமானது குறைந்த கலை வந்து நிரம்பியே—நிறைந்த பின்பேதான் விளங்கும்! மேலும், அது ஒரு மறுவையும் உடையது! அதன் அழகு அவ்வளவு!—மாதே! உன் முகத்திற்கு மறு உண்டா? தேய்தல் உண்டா? அல்லது வளர்தல் உண்டா?—கறையுடைய மதியத்தைக் கண்டு, மறுவில்லாத உன் முகத்தோடு மருண்டு, கலங்கித் திரிகின்றன கண்டாயா? ஓ! என்ன மடமை! 1117

—(வானத்து மதியை நோக்கி) “ஏ! மதியே! இவள் முகம்போலே ஒளி வீச உன்னால் முடியுமோ? முடியுமானால், என் காதலை நீயும் பெறுவாய்! மெய்யே!—இவள்போல நீயும பெறுவாய்!—இம்மாதின முகம் மறு ஒன்றும் இல்லாமல் ஒழுகும் அழகு உடையது! என்னை மகிழச் செய்கின்றது! என் அன்பை அடைகின்றது! ஏ! ஏ! மதியே! நீ மறுவையும் உடையாய! என்னை மகிழவும் செய்யாய்! என் காதலை எப்படி பெறுவாய்? பெறவே மாட்டாய்! 1118

—மதியே! என் மலர்போலும் கண்ணாள்! இவள் முகத்தை ஒத்திருக்க நீ விரும்புகின்றாயா? விரும்பினால் ஒன்று செய். நானே காணும்படி எனக்கே தோன்று. பலரும் காணும்படி பலருக்கும் தோன்றாதே!—இவள் முகத்தின் நலம் முழுவதும் நானே கண்டேன்! நானே உண்டேன்! ஆதலால, காதலித்தேன்! ஏ! நீ பலரும் பார்க்கத் தோன்றுகின்றாயே! உனக்கு நலம் ஏது? இவள் முகத்தை ஒக்க உனக்கு முடியுமா? என்னால் காதலிக்கப் படுவாயா? பட மாட்டாய்!” 1119

இவ்வாறு தன் நயப்பு உணர்த்திய தலைமகனை, ‘அழியா அன்புடையான் இவன்!’ என்று அறிந்து அகம் குளிர்ந்து முகம் மலர்ந்தாள் தலைமகள். அவள் முகமலர்ச்சி கண்ட தலைமகன், ‘இனிப் பிரியலாம்! இவள் ஆற்றுவாள்!’ என்று தெளிந்து அவ்விடம் விட்டுப் பெயர்ந்தான். பெயர, தோழி வந்து தலைமகளைச் சார்ந்து, தான் கொண்டு வந்த மலர்களைக் காட்டி மகிழ்வித்து, அவளை இல்லிடம் கொண்டு ஏகினாள்.

—நாள்.

9. வரைவு முடுக்கம்—1

களம்:—குறிஞ்சியில் ஒரு பொழில்.
காலம்:—கூதிரில ஒரு பகல்.
கூத்தர்:—தலைமகன், தோழி.

இரவுக் குறிவந்து இன்பம் உண்ணுகின்ற தலைமகன், தன வரவினைத் தலைமகளும் தோழியும் அறியும் பொருட்டு புன்னைக் காயை நீரில் எறிதலும், புள் எழுப்புதலும் முதலிய குறிகளைச் செய்வான். ஓர் இரவு அந்தக் குறிகள் அவனால் செய்யப்படாமலே நிகழ்ந்தன. நிகழ்ந்தவற்றை அவன் செய்தனவாகவே தோழியும் தலைமகளும் மருண்டு, பொழிலிடம் புகுந்து நின்று, அவனை எதிர்ப்படாமையால் திரும்பி இல்லத்துள்ளே சென்றிருந்தார். இருந்தபின், அவன் வழக்கம்போல அவ்விடம்வந்து அக்குறிகளைச் செய்தான். செய்யக் கண்ட தோழியும் தலைமகளும், அடிக்கடி வெளியே சென்றால், தம்மை அயலார் ஐயுறுவார்கள் என்று அஞ்சி, மறுபடியும் பொழிலிடம் போகாமல் மனையிடம் இருந்தார்.

(தொடரும்)

தனித் தமிழ்ப் பகுதி

நிலத்தின் தட்ப வெப்பங்களால் மொழிநடை மாறல்

வேலூர் ஊரீஸ் கல்விக்கூடம் ஆசிரியர் க. ப. சந்தோஷம் அவர்கள் பி. ஏ. எழுதியது.

(கககூ-ம் பக்கத் தொடர்ச்சி)

இஃதன்றிப் பொருளியல் வகுத்த பெரியோர் ஐம்பால நிலங்களில் பாலையைப்பிரிதலோடு பொருத்தி அதற்கு நண்பகலும் வேனிலும் முறையே சிறுபொழுது பெரும்பொழுதென வுரைத்தார். பிரிதலின் கொடுமையை யுணர்ந்த "அடிதாங்குமளவின்றியழலன்ன வெம்மையாற்" கடிதாக்கிய அருஞ்சுரத்தை யதற்கிடனாகக் கொண்டார். நிழலின்மையான் வருந்தும் மான்களும் நீர்வேட்கையால் வாடிய யானைகளும், இலைகள் தீயவும் கற்பாறைகள் கொதிக்கவும் வீசும் வெயிலில் அலைவதைப் பாலைக கலியுள் பெருக்க காணலாம். வெம்மையின தாங்கரிய தன்மையினாலன்றோ அதைப் பிரிதலுடன்வைத்தார்? குறிஞ்சிக்குக் கூடுதலைப் பொருளாக்கிக் கூதிரையும் யாமத்தையும் பொழுதாய்த் தந்தது குளிரின் இனிமையை விளக்கும். ஐரோப்பியநூல்களில் வேனிலே கூடுவதற்கேற்ற பொழுது; கூதிரே பிரிதற் கியைபுடைத்தது.

இனி, அந்தணர், தண்டமிழ், தணிவு, குளிர்தரு, தீம்புனல், புதுநீராடல், தாள்நிழல், பைந்தார், முதலியவற்றில் தட்பம் தகைமையை விளக்கியது காண்க.

நிற்க, மக்கள் விலங்கு, மரம் முதலியவை காங்கை மிகுந்த நிலங்களிற் கடிதுதோன்றி வளர்ந்து அழியும். பகலோன் சிறிது மாத்திரையே விளங்கி மறையும் நிலங்களில் பிறப்புந் திரிபும் இறப்பும் அவ்வளவு விரைவில் நடவா. நம்முடையநாட்டில் அழுகுதலும் புழுத்தலும் மூத்தலும் துஞ்சுதலும் பெரும்பான்மை நமக்குத் தோன்றுவனவே. இங்ஙனம் ஒன்று மற்றொன்றாக எந்நேரமும் மாறிக்கொண்டிருப்பதைக் கண்ணுறும் நாம், மாறாமல் நிற்கும் வழிகளைத் தேடிக் கொள்ளுகிறோம். நம்முடைய நூல்களிலும் பழக்க வழக்கங்களிலும் நாம் சீர்திருத்தத்தை விரும்புகின்றவர்களல்லர், மரபும் வழக்கும் பழமையும் இன்னும் தொன்று தொட்டு வருவனவும் நாம மிகவும் நச்சுபவை. ஆன்றோர் கொள்கை நம்மால் பெரிதும் போற்றுந் தகைமை யுடைத்து. புதியவற்றில் நம் உளஞ்செல்வதில்லை. இவ்வாறு மாறுதல்களைத்தடுப்பது நன்றன்றெனினும், அதிற்சில நன்மையுமுண்டு. தன்பின அல்லது தன்னோடு பிறந்த பிறமொழிகள் மறைந்த அல்லது சிதைந்தவாறுபோலன்றித் தனித்தியங்குந் தமிழ் நாம் கூறுவதற்குச் சான்றாகும்.

அன்றியும், தட்பநாடுகளிலுள்ளோர் உழைப்பில் ஊன்றி நின்று, முடிவுகண்டவிடத்தும் அமையாது, அம்முடிவிலிருந்தே பறபல வழிகளைத்தோன்றுவித்து மேற்செல்லா நின்றனர். வெப்பு

நாட்டுள்ளவரோ பலவழிகளில் முயன்று முற்போக்கில்லா முடிவடைகின்றனர். உள்பொருளாராய்ச்சியில் ஒருவருங் காணு உயர் வெய்திய நம்மவர், முற்போக்கில்லா முடிவடைகின்றனர் என்பது என்னெனின்; அவ்வாராய்ச்சி முடிவிலும் மேற்போக்கிற்கு கருவியாகாத அமைதியையே காண்கிறோம். ஈண்டு முற்போக்கென்பது இடையறு முயற்சி. தட்ப நாட்டார் எவ்வாராய்ச்சிக்கும் முடிவுண்டென்பதைக் கைக்கொள்ளார். ஆனால், தட்ப நிலத்தார் உள் பொருளைப்பற்றி ஒருமுடிவை அடையாதிருத்தலும், வெப்பநாட்டார் இம்மை நடபடிக்கைகளில் இறுதியை எளிதிற் கைக்கொள்வதும் தவறே.

இன்னும் தட்ப நிலத்தார் இம்மை முயற்சிகளில் தலை சிறந்து மறுமை முயற்சிகளில் அவ்வளவு ஊன்றி நில்லாது செல்வதும், வெப்ப நிலத்தார் இம்மைக் கடுத்தவைகளில் உளத்தை நாட்டி யுழல்வதை விடுத்து எத்தொழிலும் மறுமைப்பயன் தருமாறு கைக்கொண்டு செல்வதும் குறிப்பிடத் தக்கனவே. மேலும், தட்பநாட்டார் துறவு போன்ற வாழ்க்கையைக் கைப்பற்றிய பொழுதும் செய லொடுங்குத லின்றி ஒழுகுவதும், வெப்பநாட்டார் இளமையிலேயே துறவு நிலையில் விருப்பமுற்று செயலற்றிருக்க முயல்வதும் தட்ப வெப்பங்களால் உண்டாயினவே. எங்ஙனமெனின், தட்பநாட்டார் குளிரின் மிகுதியால் செயலற்றகாலை நேருங் குரக்கு வலிப்பு முதலியவற்றை நீக்க வேண்டித் தொழிலை யவாவுகின்றனர். வெப்ப நிலத்தார் சூட்டால் தம் உறுப்புக்கள் சோர்வுற்றிருப்பதால் செயலற்றிருப்பதைத் தேடுகின்றனர். இவற்றாலேயே அவர்களுடைய கொள்கைகள் மாறுபட்டன வெனினும் அமையும்.

கல்லாடம்

வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் எம். ஏ. எழுதியது.

தமிழ்ச் சுவையும் பொருட் செறிவு நிரம்பிய பழைய நூல்களுட் "கல்லாடம்" என்னும் நூல் முதன்மையிடத்துள் வைத்துப் பாராட்டற் பாலது. இந்நூலின் சொல்லமைப்பும் பொருளமைப்பும் கற்கக் கற்கப் பெரு மகிழ்ச்சி தரக்கூடியன. மதுரைச் சொக்க விறைவரின் பெருமையையும் திருப்பரங்குன்றத்துச் செவ்வேள் ஆற்றலையும் அற்புச் சுவை நனி சொட்டச் சொட்ட இந்நூல் எடுத்தோதும். காட்டாகச் சிவபெருமானைக் கூற வேண்டிய வழி, அவரிடத்தே முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐந்திணையும் அமைந்துள்ளன எனப் பின் வருமாறு ஓரிடத்தில் அருமையாக விளக்குகின்றனர்.

"தாளியுங் கொன்றையுந் தழைத்தலின்
[முல்லையும்
பாந்தளுந் தரக்குர் பயிறலிற் குறிஞ்சியும்
முடைத்தலை யெரிபொடி யுடைமையிற்
[பாலையும்
ஆமையுஞ் சலமு மேவலின் மருதமுங்
கடுவுஞ் சங்கமு மொளிர்தலின் நெய்தலு
மாகத் தன்து பேரருண் மேனியிற்
றிணையைந் தமைத்த வினையிலி நாயகன்."
(சுசு)

முருகவேளைச் சொலப் புகுந்தவர் பின் வருமாறு கூறுகின்றனர்:—

"பேரொளி மேனியன்; பாருயிர்க் கோருயிர்;
மாவுடைக் கூற்றம்; மலரயன் தண்டம்;
குறுமுனி பெறுமறை; நெடுமறை பெரு
[முதல்;
குஞ்சரக் கோதையும் குறமகட் பேதையு
மிருந்தன விருபுறத் தெந்தையென் னமு
[தம்" (எடு)

இந்நூலில் அநேக அரிய செய்திகள் கூறப்பட்டுள. அவை ஆழ்ந்து கற்பவர்க்கு நன்கு புலப்படும். மேற்பார்

வையாகப் பார்த்ததிற் கண்ட பொருட் (விஷயங்) களுட் சில கீழ்க் காட்டுவாம்.

௧. திருவிளையாடல் வரலாறுகள்.

	பாடலின் எண்கள்.
1. திருவிளையாடல் அறுபத்துநான்கு என்பது	98
2. இந்திரன் பழி தீர்த்தது	30, 37
3. தடாதகைப் பிராட்டியை மணந்தது	4
4. தென்னவனா யுலகாண்டது	32
5. வெள்ளியம்பலக் கூத்து	10, 28, 36, 43, 78
6. குண்டோதரனுக்கு சோற்றுக்குழியும் வையையுங் காட்டியது	12
7. மாமியாடக் கடலை வரவழைத்தது	27
8. உக்கிரபாண்டியன் திருப்பிறப்பு	77
9. கடல்சுவற வேல்விட்டது	77
10. மாணிக்கம் விற்றது	11, 100
11. கல்லானைக்குக்கரும்பருத்தியது	31
12. மாறியாடினது	24
13. உடல் வெட்டினது	51
14. வளையல் விற்றது	47
15. சோழனை மடுவில வீட்டியது	82
16. மாமனாகவந்து வழக்குரைத்தது	46
17. விறகு விற்றது	45
18. பாணபத்திரர் பொருள்பெறச் சேரனுக்குத் திருமுகந்தந்தது	13
19. பன்றிக் குட்டிகளுக் கருளினது	39
20. கருங்குருவிக் கருளினது	41
21. திருவாலவாயானது	48
22. தருமிக்குப் பொற்கிழியளித்தது	3
23. கீரனைக் கரையேற்றியது	52
24. கழகத்தார் கலகந் தீர்த்தது	2
25. இடைக்காடன்பின் சென்றது	78
26. வலை வீசினது	17
27. நரி பரியாக்கியது	44, 98
28. புலி முலை புல்வாய்க்கருளியது	42
29. பிட்டுக்கு மண் சுமந்தது	49

௨. பிற நிகழ்ச்சிகள்

இறையனா ரகப்பொருள்	5, 65
கழகத்தார் நாற்பத்தொன்பதின்மர்	65
முருகர்திருக்கைவேல் தாரை (கண்கள்) எட்டுடையதென்பது	63
திருக்குறள்	62
தக்கன் வேள்வி	6
சில தலங்கள்	61
அடிமுடி தேடினது	60
யானைக்கு வீடருளியது	59
மறலியை யுதைத்தது	29, 56
நஞ்சுண்டது	53
விஜயனொடு விற்போர்	50
காளியொடு ஆடியது	101
இராமாயணம்	97
பாரதம்	95
மாபலி—மூவடிமண் அரசுபெற்றது	96
தாருகாவன முனிகளையடக்கினது	35
சோழனைச் சிறையினின்று மீட்டது	34
முப்புரமெரித்தது; முப்புரர்க் கருளினது	23, 24, 27
இராவணனைக் காலின் கீழ் அமுத்தியது	80
குரண்டாசுரனை அழித்தல் கொக்கிறகணிந்தது	69
பழம்பெற விநாயகர் சிவனை வலம் வந்தது	1
கடல் அணிந்துறை	25
நடராஜர் கூத்தின் அணிந்துறை	23
திருவள்ளுவ மாலையில் முதற் செய்யுள் இறையனார் பாடினது	15
மூர்த்தி நாயனார்	57
காரைக்காலம்மையார்	78, 101
குறுமுனி	2, 19, 65, 67, 75
சகரர்	83
காசி ஸ்தலம்	89
நூறு வேள்விசெய்ய இந்திரநிலை	83

தமிழிலும், சிவபிரானிடத்தும், தமிழ்க் கடவுளாம் முருகவே ளிடத்தும் அன்புள்ளவர் யாவரும் இந்நூலைக் கற்று அதன் பொருளை உணர்ந்து மகிழுதல் வேண்டும்.

குறிப்பு—மேற்கண்ட வற்றுள் வரும் சில வடமொழிச் சொற்கள் இன்றியமையாப் பெயர்களாயிருத்தல்பற்றியும் பழக்கத்தால்வந்த பொருள் விளக்கத்தின் பொருட்டும அமையுமாறு விடப்பட்டன.

இன்ப நூல்
அல்லது
அகப்பொருள் ஆராய்ச்சி

(பத்திராசிரியர் சி. மு. நடேச முதலியார் எழுதுவது)

(கருங-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஒருவருள்ளத்தை ஒருவரறியாத ஒருதலைக் காமமாதலிற் கைக்கிளைப் பால" எனவும், 'நெஞ்சின் மிக்கதுவாய் சோர்ந்து தான் வேட்டபொருள் வயிற் றன் குறிப்பன்றியேயுஞ் சொன்னிக ழும். நிகழுந்தொறும் மகிழ்ச்சி தோன் றும்' எனவும், "புறத்தக் கண்டதோர் பொருள் காரணமாக நெஞ்சின்கட் டோன்றிய விகாரத்தின் விளைவு" என வும் கூறுவர் பேராசிரியர்.

இக்கைக்கிளை ஆண் பெண் இருபாலா ரிடத்தும் நிகழக்கூடியதே.

நச்சினார்க்கினியர் "முன்னைய நான்கு முன்னதற்கென்ப" என்னும் (பொ-அக-ருஉ) செய்யுளுக்கு உரை கூறுகையில், 'இவை தலைவி வேட்கைக குறிப்பு தன் மேல் நிகழ்வதனைத் தலைவன் அறிதற்கு முன்னே தன் காதன் மிகுதியாற் கூறு வனவாதலிற் கைககிளையாயிற்று' எனக் கைக்கிளையை விளக்கிப் பின் 'இது தலை வனுக்கே உரியது' என ஆண்பாற் கைக் கிளையே கூறினர்.

"கைக்கிளை யுடைய தொருதலைக் காமம்"
(அ-விள-ங.)

என்ற அகப்பொருள் விளக்கச் செய்யு ளுக்கு அதன் உரைகாரர் "ஆண் பெண் இருவருள் ஒருவர்பால் நிகழும் உறவு. அது ஆண்பாற் கைக்கிளை பெண்பாற் கைக்கிளை என இருவகைப்படும்." எனக் கூறுவர்.

இனி, ஈற்றிலுள்ள பெருந்திணையைப் பேசிப் பின் நடுவணைந்திணையைக் கூறுவாம்.

பெருந்திணை.

மக்களுக்கு வகுக்கப்பெற்ற எண் வகை மணங்களுள் பெருந்திணை யொன்றே முதல் நான்கு மணங்களையும் உரியதாக்கிக் கொண்டிருத்தலின் பெருந் திணை யெனப்பட்டது. :சிறப்பாகக் கொள்ளப் படுவதுமன்று. இப்பெருந் திணையை நால் வகையாக வகுத்துக் கூறுவர் தொல்காப்பியர். அது,

"ஏறிய மடற்றிறம், இளமை தீர்திறம்.
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்,
மிக்ககாமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே"
(தொ-பொ-அ-ருச.)

இந்நால்வகையுள் ஏறிய மடற்றிறம் என்பது: தான் கருதிக் காதலித்தவள் தனக்குக் கிட்டுதல் அரிதாயின் அப் பொழுது மடன்மா ஏறுவலென்று துணி ந்து தான் கருதியது பெறலாம்.

இளமைதீர்திறம் என்பது: தலைமகள் முதியனாகித் தலைமகள் இளையளாதலும், தலைமகள் முதியளாகித் தலைமகன் இளை யனாதலும், இருவரும் முதிர்ந்த பின்பும் துறவுகொள்ளாது காமத்தே அழுந்திப் போற்றலும் என மூவகைப்படும்.

தேறுத லொழிந்து காமத்து மிகு திறம் என்பது: காதலன் பிரிவுற்று கடி தில் வந்தணுகாது காலம்நீளவும் தலைவி அவனிடத்துள்ள அன்பின் மிகுதியால் பிரிவாற்றாளாய் வருந்த தோழியும் சுற் றத்தாரும் ஆறுதல்கூறியும் தேறுதலின் றிப் புலம்பி நிற்றல். இது பெரும்பான் மையும் தலைமகளுக்கே (பெண்ணுக்கே) உரியது என்பர் இளம்பூரணர். இதன் இயலைக் கலித்தொகையில் நன்கு உரை ப்பர் நல்லநதுவனார்.

மிக்க காமத்து மிடலொடு என்பது: ஐந்திணைக்கண்நிகழும் காமத்தின் மாறு பட்டு வருவது.

"பெருந் திணையாவது நடுவண் ஐந் திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வருதலானும், எண்வகை மணத்தினும் முதல் நான்கு மணமும் பெருந்திணையின்பாற் படுதலானும், இந் நான்கு மணமும மேன்மக்கள் மாட்டு நிகழ்தலானும் இவை உலகினுட் பெரு வழக்கெனப் பயின்று வருதலானும்

பெருந்திணை எனக் கூறப்பட்டது.'' எனவும்; ''கைக்கிளை ஒருதலை வேட்கையும் பெருந்திணை ஒவ்வாக் கூட்டமுமாய் இன்பம்பயத்தல் அரிது'' எனவும் கூறுவதோடு இவ்விரண்டையும் உரிப்பொருளிற் கொண்டு கூட்டுவர் இளம்பூரணர். அவர் கூறுவது: ''கைக்கிளை பெருந்திணை என்பவற்றை உரிப்பொருளென ஓதியது யாதினாலெனின்? எடுத்துக் கொண்ட கண்ணே 'கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்' என ஓதி அவற்றுள் நடுவண் ஐந்திணைக் குரியன இவையெனப் புணர்தல் முதலாக வகுக்கப் படுதலின் முன் வகுக்கப்படாத கைக்கிளையும் பெருந்திணையும் உரிப்பொருளாம் என்றுணர்க'' என்பதாம்.

'பெருந்திணை யென்பது பொருந்தாக் காமம்'
(அ-விள-ரு.)

என்பர் நாற்கவிராச நம்பியாரும். ''தலைவன் தலைவி இருவருக்கும் ஒத்த அன்பின்மைபற்றி பொருந்தாக் காமம் என்றார்'' என்பர் அதன் உரைகாரர்.

ஐந்திணை.

மேற்போந்தவைகளினானே கைக்கிளை பெருந்திணை என்பன இவையெனவும் அதன் கிளவியும் தெள்ளிதின் விளங்கி அவை பயனில் திணைகளாய்க் கழிந்தன. இனி இவற்றுள் எஞ்சியுள்ளன இவை யொழிந்த ஐந்திணையாம். இவ்வைந்திணையே மக்கள் இன்ப ஒழுக்கம் நிகழ்தற்கு உரிய முதலாய் அமைந்த பெற்றியது. இதனைத் தொல்காப்பியர் களவியலுள் பின்வருமாறு விதந்துரைப்பர். அது,

''இன்பமும் பொருளு மென்றங்
கன்பொடு புணர்ந்த ஐந்திணை''
(தொ-பொ-கள-க.)

என்பதாம்.

''இன்பமும் பொருளும் அறனும் என்று முற்கூறிய மூவகைப் பொருள்களுள் ஒருவனோடு ஒருத்தியிடைத் தோன்றிய அன்போடு கூடிய இன்பத்தின் பகுதியாகிய புணர்தல் முதலிய ஐவகை ஒழுக்கம்'' என விளக்குவர் நச்சினார்க்கினியர்.

இதனையே அகப்பொருள் அருளிய இறையனார்தாமும் 'அன்பின் ஐந்திணை' எனச் சிறப்பினிற் றொடங்குவரெனின் அதன் சிறப்பினைச் சிறக்க விளக்குதல் சிற்றறிவும் சிறு தொழிலுமுடையேற்கு முற்று முடிவதோ?

''ஐந்திணை யுடைய தன்புடைக் காமம்''
(அ-வி-௪.)

என்பர் நாற்கவிராச நம்பியாரும்.

இதற்குத் ''தலைவன் தலைவி இருவர் மாட்டும் சமமாக நிகழும் மனப்பற்றாகிய இன்பம் பொருந்தும் ஐந்து கூறுபாடாகிய ஒழுக்கமாம்'' எனப் பொருளுரைப்பர் அதன் உரைகாரர்.

ஐந்திணைப்பெயர்.

இத்துணைச் சிறப்பின் மிக்க இவ்வைந்திணை யெனப்படுவது முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் எனப் பெயர்கள் பெறும். இவை அவ்வந்நிலத்துப் பெயர்களாமென்க. இப்பரந்த மாநிலத்தை முற்றும் முறைப்படுத்திய முன்னைப் பழைய நாளிற்றானே இவ்வகையே பாகுபடுத்தி அவ்வந்நிலத்தே ஒழுகத்தக்க ஒழுக்கங்களையும் கற்பித்தனர் மேலோர். முல்லை முதலியவெல்லாம் முதலிலே அவ்வந்நிலத்து இயற்கைப் பொருள்களுக்குப் பெயராய்ப் பின் அந்நிலங்களுக்கு ஆகுபெயராய் அதினின்றும் அந்நிலத்தின் திணைகளுக்குப் பெயராவது மரபாம். இவ்வகை இயற்கைக்கும் கால மாறுபாட்டுக்கும் என்றும் திரியா நிலைப்பேறுடையனவாம். இங்ஙனம் வகுத்த மேலோர் பாலையை ஒழுக்கத்தினுக்கு மட்டிலுங் கொண்டு நிலத்திணை நால்வகையாகவே வழங்குவர்.

''அவற்றுள்,
நடுவ ணைந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே''
(தொ-பொ-அ-உ.)

என்பர் தொல்காப்பியர். இந்நால்வகை நிலங்களே வளமையிற் கெட்டு நிற்கும் பொழுது பாலையெனப் படுவதாகும் என்க; நம் தமிழ்நாட்டில் யாண்டும் பாலையில்லை யாகலின்.

''முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்''
(சிலப்-காடு-64-66)

என்ற இச்செய்யுளினின்றும் முல்லையி லுங் குறிஞ்சியிலும் பாலை வந்தமையும்,

"நிழலுரு விழந்த வேனிற்குன் றத்துப்
பாலை சான்ற சுரஞ்சேர்ந் தொருசார்"

என்ற இச்செய்யுளி னின்றும் குறிஞ்சியிற் பாலை வந்தமையும் அறிகின்றோம்.

"பாலை யென்பதற்கு நிலம் இன்றேனும் வேனிற்காலம்பற்றிவருதலின் அக்காலத்துத் தளிரும் சினையும் வாடுதலின்றி நிற்பதால் பாலை என்பதோர் மரமுண்டாகலின் அச்சிறப்பு நோக்கிப் பாலை யென்று குறிப்பிட்டார்" என இளம்பூரணரும்;

"பாலை ஏனையபோல் ஒருபாற்படாது நால்வகை நிலத்திற்கும் உரியவாகப் புலனெறி வழக்கஞ் செய்து வருதல்பற்றிப் பாலைக்கு நடுவணது என்னும் பெயர்" உண்டெனா நச்சினார்க்கினியரும் கூறுவர்.

திணைப்பெயர்ச் சிறப்பு.

மேலே திணைகளுக்குப் பெயர்வகுத்ததெல்லாம் அவ்வத் திணைக்குரிய நிலங்களின் பெயராமெனவும் அப்பெயர்தானும் அவ்வத்திணையின் சிறப்புப் பொருளின் பெயரெனவுங் கூறினும். ஈண்டு அவ்வத்திணை நிலத்தின் சிறப்பும் பொருள்தானும் யாதெனா அறிவாம். இதனை இளம்பூரண அடிகள் பின் வருமாறு கூறுவர்:

"முல்லை குறிஞ்சி என்பன இடுகுறியோ காரணக் குறியோ எனின்; ஏகதேச காரணம்பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்றே கொள்ளப்படும். என்னை காரணமெனின்,

'நெல்லொடு
நாழிகொண்ட நறுவீ முல்லை
யரும்பவிழ லரிதூஉய்' (முல்லைப்-அ-கo)

என்றமையால் காடுறை உலகிற்கு (முல்லை நிலம்) முல்லைப்பூச் சிறந்ததாகலானும்,

'கடுங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே'
(குறுந்-௩)

என்றவழி மைவரை உலகிற்கு (குறிஞ்சி நிலம்) குறிஞ்சிப்பூச் சிறந்ததாகலானும்,

'பாசடைநிவந்த கணைக்காலனெய்த
லினமீனிருங்கழி யோதமல்குதொறுங்
கயமூழ்குமகளிர் கண்ணின்மானும்'
(குறுந்-9)

என்றவழிப் பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்ததாகலானும்,

'ஆரலருந்திய சிறுசிரன்மருதின்
றாழ்சினையுறங்குந் தண்டுறையூரன்'

என்றவழித் தீம்புனலுலகிற்கு (மருத நிலம்) மருது சிறந்ததாகலானும், இந் நிலங்களை இவ்வாறு குறியிட்டார்."

இஃதற்றாக; நச்சினார்க்கினியர், முல்லைமுதலிய திணைகளை முன்னோர் வகைப்படுத்தியுள்ள முறையினது சிறப்பை எடுத்து விளக்குங்கால் "முல்லை முதலிய பூவாற் பெயர் பெற்றன இவ்வொழுக்கங்களெனின் அவ்வந்நிலங்கட்கு ஏனைப் பூக்களும் உரியவாகலின் அவற்றாற் பெயர் கூறலும் உரியவெனக் கடாயினாற்கு விடையின்மை உணர்க" என்று பூவாற் பெயர் பெறுவனவல்ல என்றுமறுப்பர். ஆயின் இளம்பூரணர் முல்லை முதலிய பூவாற் பெயர்பெற்றன அத்திணைகள் என்று கூறியது ஏனைப்பூக்களும் அவ்வத்திணைக்கும் உரியவை ஆகலாமெனினும் அவற்றுள் இவ்வொவ்வொன்றே சிறப்பாகக் குறிக்கப்பெறுவது என்ற முறையில் பூவாற் பெயர்பெற்றன வென்று கூறியதும் இழுக்காகாது. என்னை? பல பொருட்களுள் ஒன்றினொன்று உயர்ந்து ஒன்றே சிறப்பிக்கப் பெறுவதாகலின்.

" தாமரை மருத நிலத்துப் பூவாதலான் மருதமும், நெய்தல் நெய்தனிலத்துப் பூவாதலான் நெய்தலும், குமிழ் முல்லை நிலத்துப் பூவாதலான் முல்லையும், கோங்கு பாலை நிலத்துப் பூவாதலான் பாலையும், காந்தள் குறிஞ்சி நிலத்துப் பூவாதலாற் குறிஞ்சியுமென இவ்வைந்து பூவினாலும் ஐந்து திணையுஞ் சுட்டினார்" என்பர் பேராசிரியரும்

(தொடரும்)

தனித்தமிழ்

(கசரு-ம் பக்கத் தொடர்ச்சி)

"அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனி [யுஞ்
செந்தமிழ்க் கீதமும் சீரினால் வளர்தர"

"மந்திபோல்திரிந் தாரியத்தோடு செந்தமிழ்ப் [பயனறிகிலா
அந்தகர்க் கெளியேனலேன் திருவாலவாயரன் [நிற்கவே"

என்று ஆளுடைய பிள்ளையாரால் (திருஞாந சம்பந்தரால்) அருளப்பட்ட தேனினு மினிய "தேவாரப்" பாவினாற் சிறப்பிக்கப்பட்ட செந்தமிழ்—நந்தம் தனித்தமிழ்-நிறைந்த அறிவை விளைப்பதாலும், அறிவிற் சிறந்து விளங்கச்செய்வதாலும், பயின்றோரால் தன்னெழிலொளி யறிவை யெங்கும் பரப்புவதாலும் உரமாம் அறிவென்ன (சித்தாய்) அம்மொழிப் பயிற்சியுடையார்க்கு ஏதமற்ற இன்பத்தை யெண்ணுந்தோறும், பன்னுந்தோறும், அம்மொழி அறிவு நூனெறிக்கிணங்க ஒழுகுந்தோறும ஊறும் இன்பமாய் (ஆநந்தமாய்) இசை பெற்றது இன்தமிழேயாம். அறம் பொருள் இன்பமாய இம்மைப் பேறுகளும், இம்மையின்தோற்றமறப் பொறி புலனடங்கி யொரு முதலை நாடி யின் தமிழ்அறிவுநூலுணர்ச்சியரும்புஞான்று மறுமைப் பேறாகிய வீடும் இந்நிலவாழ்க்கையிலேயே சேரவளிக்கும் தகைமை யுடையதுமாம் தண்டமிழ். அரும் பெரும் பொருள்களை தன்னகட்டே கொண்டிருந்த எழின்மணக்கும் ஏற்றத்தை யறிந்த பன்மொழியாளர் தத்தம் மொழிக் குண்டிகைகளில் ஏற்றுச் சென்று பின்னர் வந்த வாய்க்கால் வழி மறந்து தத்தம் மொழிகளிலேதாம் பெறற்கரும் பேறுகளுளவென்று கூறி "கொல்லர் வீதியில் ஊசிவிலை கூற வந்தமை யொப்ப" நம் நாட்டினர்க்கே காட்டி தம் மொழியின் சிறப்பை யெடுத்துரைப்பா ராயினர். அத்தகைய, என்றும் எப்பொருளோடும் நிலவிய தனித் தமிழிலா எல்லா வுறுப்புகட்கும் தனித தனிப் பெயர்களிருக்க தலையின் முன் முகப்புக்குப் பெயரிலாது குறைவுற்றது தமிழ்மொழி! வடமொழிப் பாணினியனூ லாக்கப் படுவதற்கு முன்னரே வடமொழி யமைக்கப்படுவதற்கு முன்னரே தன் இருப்பைப் பெற்றிருந்த தனித்தமிழின் மொழியாளர் முக உறுப்பை வழங்காமலா இருந்திருப்பர்? அங்ஙன மன்று தமிழில் அவ்வுறுப்புக்குப் பெயரிருந்தது அது இப்போது மூஞ்சி யென்பதே என்று கூறுவாராயின் ஐயோ இவர் தம் ஏழையுணர்வை யென்னென்றுரைப்பது! தமிழிலிருந்து பன் மொழிக்கும் பன்னூறு சொற்கள் செல்ல அவற்றின் திரிபாய்த் தெலுங்கர் தம் மூததியெனுஞ் சொல் தமிழ்க்கல்வி யறிவில்லா தெலுங்கநாட்டைச் சார்ந்துறைபவரது மரூஉ வழக்கால் மூஞ்சி யெனத் திசை சொல்லாய் மொழிநல மில்லார் வாய்ச்சொல்லாய் வழங்குவதை யோரார். பழைய நாட்களில் நீரைக் காணாமலும், பயன்படுத்தாமலும், வழங்காமலுமா இருந்தார் தமிழர்? வடமொழியினின்று நாரம நீரம் என்பவற்றைக் கொண்டு நீர் எனச் சொற்கொண்ட பின்னர் தான் தமிழ்நாட்டில் நீர்படைப்பு ஏற்பட்டு வழக்குக்குத் தகுதி பெற்றது போலும்! அதற்கு முன்னர் தமிழ்ஞாலத்து ஆக்கப் பொருள்களாகிய நிலம், நீர், வளி, வான், அழல் என்னும் ஐந்தில் நீராகிய ஒன்று குறைவுற்றிருந்ததோ? மெய், வாய், கண், மூக்கு, செவி, நுதல், இமை, புருவம், இதழ், பல், நா, கதுப்பு, முகவாய்க்கட்டை முதலிய உறுப்புக் குழாத்துக்கு ஓர் பெயராகிய முகம் இதுபோன்ற பல பொருட்கூட்ட ஒரு பெயர் தமிழில் இல்லை யென்பர். ஒன்றின் கூட்டம், பலவினீட்டம், திரிபிணக்கங்களின் இயல்களையும் அவை யமைந்த மரபினையும் அறிந்து அகவிருளகற்றுவது அவாதங் கடனாம். நந்தம் மொழியிலிருந்து கொண்டு போகப் பட்ட தமிழ்ச் சொற்களைத் தன்மை, பண்பு, ஒலி, ஒப்பு, பொருள், கருவி

முதலியவற்றால் ஒற்றுமை யறிந்து தமிழ்ச் சொற்களைப் பெறுவது நந்தம் செய்கடனும்.

அஞ்ஞான்று தெற்கே கடல்வெள்ளம் புக்கு நின்று கன்னியாற்றையும் ௪௯-நாடுகளையும் அழித்து ஆழச் செய்தது- அதனாலே பண்டை நூற்கள் மறைந்தொழிந்தன என்னும் அரற்றல் ஒரு சார் முழங்க வடக்கே யிருந்து ஆரிய அருவி தமிழ் நாட்டில் நுழைந்து அரியனவாய அறிவு நூற்களை யலைத்துக் கொடுபோன கூக்குரல் ஒலிக்க இவ்வோதைகளையடக்குவான் வடமொழியில்தான் எல்லாப் பொருள்களும் நிறைந் திருக்கின்றன- குறையற்ற மொழி—வேண்டுநர்க்கு வேண்டியாங்கு வரையாதளித்தது வடமொழியே யென்றும் தமிழ் மொழிகள் எல்லாம் வடமொழிச் சொற்களே யென்றும் ஒரு மொழியாயினும் தனித்தமிழுண்டோ வென்றும் கொல்புலி முழக்கமென்ன வயின்றொறுங் குளிர்ந்ததா யறிகிறோம். வடக்கேயுள்ள நாடுகள் பலவும் அததற்கென்றே அந்நாடுகளின் பெயர்களையே தம் பெயராக் கொண்ட இந்துஸ்தானி, வங்காளி, உரியா, மராட்டி இன்னன பிற மொழிகள் நாட்டின் பெயரைப் பெற்றே ஏற்பட்டு நிற்க வடமொழி யென்னும் (சம்ஸ்கிருதம்) திருத்தப்பட்ட மொழி வழங்கும் நாடு எதுவோ? எந்த நாடு அதைப் பெற்றிருந்து அதன் பெயரால் அந்நாட்டின் பெயர் வழங்கப் பெற்றதோ? அந்த மொழியைப் பேசிய மக்களைப் பெற்றுப் பெருமை பெற்ற நாடு எதுதானோ?-விடையில்லை. இன்மையே விடையாம். அந்நாளிருந்த ஆரியர் தமக்காக ஓர் மொழியையாக்கி யதனில் தமிழ்ச் சீர்த்தியையெல்லாம் பெய்து வைத்தனர். அம்மொழியில் மிகப் பயின்றாரும் மயங்கிப் பொருள் கொள்ளுமொழி யதுவாகலின் அதைப் போற்றுநரும் விரிந்து காணாது விலகும் நிலையினை யுடையதாம். ஆகவே, நந்தம் தாயாம் தனித்தமிழ் மகளின் அணிகலன்களை நாம் மீட்பது நமது கடமை. அவ்வணிகலன்களெனத் தகும் தமிழ்க்குரிய அறிவு நூற்களும் கொள்கை நூற்களும் பல அம்மொழியில் வடிவு வேறுபட்டுள. நந்தம் இசை (அவர் தம் சங்கீதம்) நந்தம்கூத்து (அவர்தம் நாடகம்) ஆகியவற்றையும் பிற உரியவற்றையும் நந்தம் தமிழ் வடிவில் பெற்றுக் குறையை நிறைவாக்குவது தமிழர்தம் செயற்குரிய செயலாம்.

(முற்றும்)

சோழ. க. சச்சிதாநந்த முதலியார்
2nd Asst., Corpn., School, Choolai.

உறுதியின் உரம்

(௧௫௯-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞா:—ஆனால், கடவுள் தீவினையாளரை அவர்கள் சென்றவழியே விட்டு, கேடடையச் செய்வது அவர்தம் அழியாப் பேரருளுக்குப் பெருங்குறைவை யுண்டாக்குமல்லவா? தஞ்சொற் கேளாத்தறிதலைகளோடு மாறுகொண்ட தந்தையர்க்கும், எவ்வுயிருங் காத்தளிக்கும் எம்பிராற்கும் வேறுபாடு வேண்டாவோ?

தி:—குழந்தாய்! சற்றுப்பொறு. உண்மைத்தந்தையார், தஞ்சொற் கேளாத் தம்மக்களோடு ஒருகாலும் மாறுகொளார். ஏனெனில், "கடந்தஞானியும் மறப்பரோ, மக்கண் மேற்காதல்," என்பது ஆன்றோர் வாய்மொழி. ஆகையால், அவர்கள் சிறிய குற்றங்களில் தங்கள் பொல்லாப் புதல்வர்களைச் சீர்திருத்தா விடினும், பெருந்தவறிழைத்து அதனாற் பொறுக்கொணாத் துன்புற்று, தன்குற்றத்தை யுணர்ந்து வருந்தும் வேளை, உடுக்கும் உடையிழந்தவன் கைபோல, சென்று காப்பாற்றி, நல்வழிப்படுப்பார்கள்.

அதுபோலவே, எம்பிரானும் தீவினையாளரை அவர்செல்லும் வழியே சிறிது விடுத்துப்பின் பல இடையூறுகளை யுண்டாக்கி, தன்னைநோக்கி வருந்தச் செய்து, பின் தோன்றுத்துணையாக் காப்பாற்றி நல்வழிச் சேர்ப்பார் என்பதும் கருத வேண்டும்.

ஞா:—பொருள்கள் புலனாயின. ஆனால், யான் இன்று தங்கட்குப் பலவிதத்திலும் துன்பங்களை யுண்டாக்கினேன்; மன்னிக்க வேண்டும்

தி:—துன்பங்களா! அங்ஙனம் என்ன செய்தாய்? ஒன்றுஞ் செய்யவில்லையே!

ஞா:—ஒன்றுமில்லையா! நளிரினால் வருந்திய தங்கட்குப் பெரும்பிழை செய்தேன். களைப்பாற வேண்டிய தங்கட்கு எனது வார்த்தைகளாலும் துன்பந்தொடரலாயிற்று. யான் இவ்வளவு பேசாதிருப்பின்; தாங்கள் சிறிது களைப்பாறி யிருப்பீர்கள். என்னறியாமையாலதனைக் கெடுத்தேன்.

தி:—அப்படியொன்றும் நீ செய்ததாகக்காணவில்லை. மழையும் நின்று விட்டாற் போற் காண்கின்றதே?

ஞா:—ஆம் அடிகாள், மழை அடக்கமிலார் செல்வம் போன்றடங்கி விட்டது.

தி:— ஏதோ முழவொலி கேட்கின்றதே. அஃதியாதோ?

ஞா:—இவ்வொலிதான் நமது தில்லைவாணனார் திருப்பள்ளி யெழுச்சியைக் குறிப்பிடுவது.

தி:—என்ன! பள்ளியெழுச்சியைக் காட்டுவதா? ஆயின், புலரிவேளை புகுந்தது போலும். நன்று, நன்று, இன்றென் செய்கை.

என்று பெரியார் தனக்குட் கூறிக்கொண்டு ஞானரத்தினம் முதலியோரிடத்து விடை பெற்று, அவ்வீட்டை விட்டு வெளியேறி மேற்கு நோக்கி விரைந்து நடக்கலானார். (வரும்)

தொண்டர்தந் தொண்டன்.

மாணவர் பக்கம்

தொடக்கக் கல்வி

(௧௫௦-ம் பக்கத் தொடர்ச்சி)

உடற்பயிற்சி தலைப் பழக்கம் இடப்பக்கம்.

இரண்டாம் பழக்கம் தலைகளை முன்போல இடப்பக்கம் சாய்த்தும் நிமிர்த்தியும் சாய்த்தும் நிமிர்த்தியும் திரும்பி நிற்றல் செய்வித்தலாம். மூன்றும் பழக்கம் தலைகளை யிருபுறங்களிலும் சாய்த்தலைக் கற்பிக்கவேண்டும். ௧-என்றவுடன் வலப்பக்கம் தலைகளைச் சாய்த்தும், ௨-என்றவுடன் நிமிர்த்தியும், ௩-என்றவுடன் இடப்புறம் சாய்த்தும் ௪-என்றவுடன் நிமிர்த்தியும் வலமாகத் திரும்பியும் இப்படியே இப்பழக்கத்தைச் செய்தவாறே வலமாகத் திரும்பி முன் நிலையில் நிற்கச் செய்தல் வேண்டும்.

தலைப் பழக்கம் இருபுறமும்

பின்னர் மூன்றும் பயிற்சி முதற் பழக்கம் இடுப்புப் பழக்கத்தைச் செய்விக்க பிள்ளைகளை நோக்கி இடுப்பின் மேல் கைகளை வைக்க என்று ஏவி ௧-என்றவுடன் இடுப்பிலிருந்து மேல்பாகம் நெட்டாக முன் நோக்கிச் சாய்ந்தும், ௨-என்றவுடன் நிமிர்ந்தும், ௩-என்றவுடன் முன்போல் குனிந்தும், ௪-என்றவுடன் நிமிர்ந்தும் உடனே வலப்புறந் திரும்பியும் இப்படியே இடுப்புப் பழக்கதை முன்புறமாகச் செய்து செய்து திரும்பி முதல் நிலையில் நிற்கச் செய்தும்; அடுத்தாற்போல் இரண்டாம்

இடுப்புப் பழக்கம் முன்புறம் சாய்தல்.

பழக்கம் பின்புறம் சாய்தல் பழக்கத்துக்கர்க முன்னை யேவலோடு பின்புற

பின்புறம் சாய்தல்.

மாகச் சாய்ந்து நிமிர்ந்து சாய்ந்து நிமிர்ந்து வலப்புறந் திரும்பி மேற்படி பழக்கத்தைப் புரிந்து திரும்பி இங்ஙனம் செய்த பின் நாலாவது பக்கமாகிய முதல் நிலையில் நிற்கச் செய்தல், மூன்றும் பழக்கமாகிய இருபுறமும் சாய்தற் பழக்கத்தைச் செய்விக்க க-என்றவுடன் முன் நோக்கிக் குனிந்தும், உ-என்றவுடன் நிமிர்ந்தும், ங-என்றவுடன் பின்புறம் சாய்ந்தும், ச-என்றவுடன் நிமிர்ந்தும் வலப்புறம திரும்பி நின்றும் இப்படியே இருபுறஞ் சாய்தற் பழக்கத்தையும் திருமபுதலையுஞ் செய்து முதல் நிலையில் நிற்கச்செய்தல் வேண்டும். பின்

கால்பழக்கம் முன்பக்கம் உயர்த்தல்.

னர் நான்காம்பயிற்சி முதற்பழக்கம் இடக்காலுயர்த்தல் பழக்கத்தைச் செய்விக்க இடுப்பின்மேல் கையிருக்க, க-என்றவுடன் இடக்காலை முன்புறமாகச் சற்று உயருமாறு வலக்காலின்மேல் உடல் சுமையை யிருத்தி இடக்காலைக் கீழிருந்து மேல் நோககியபடி வளைவின்றியுயர்த்தி, உ-என்றவுடன் நேராகத் தரையில் நிற்கும் நிலையாகத் தாங்கியும் ங-என்றவுடன் முன்புறம் உயர்த்தியும், ச-என்றவுடன் முதல் நிலையில நிறுத்தல். வலக்கால் பழக்கத்தை இங்ஙனமே செய்வித்து வலப்புறந் திரும்பச் செய்தும் பின் இடக்காலை முன்புறம் உயர்த்தல் வலப்புறம் திரும்பி நிற்றல் ஆகியவற்றைச் செய்தபடியே முதல் நிலையில் நிற்கச் செய்தல். இரண்டாம் பழக்கம் இடக்காலை எண்ணிக்கையுடன் பின்புறம்

பின்புறம் உயர்த்தல்.

உயர்த்தல். வலக்காலை யுயர்த்தல். வலப்புறந் திரும்பல் இங்ஙனமே முதல் நிலைக்குவரச்செய்தல் மூன்றும் பழக்கம் இடக்காலை முன்னும் பின்னுமபோய் வரும்படியாக க-என்றவுடன் இடக்கால் முன் சென்றுயாந்தும், உ-என்றவுடன் அப்படியே பின்

இருபக்கமும் வீசப்படல்.

சென்றும், ங-என்றவுடன் முன் சென்றும், ச-என்றவுடன் நிலையில் நிற்கவும் வலப்புறம் திரும்பி நின்றும் இவ்வண்ணமேசெய்து திரும்பி முதல் நிலை வருதலும் வலக்கால் முன்னைய முறையாகவே முன்னும் பின்னுமாக வீசப்பட்டு வலப்புறங்களில் திரும்பி பழமையேபோல் முதல் நிலையில் நின்று "ஒழுங்காய் நிற்க" என்ற கட்டளையால் கைகளைத் தொங்கவிட்டு "முன் இருந்தபடி நிற்க" என்ற ஏவலால் முன்னுக்கு வந்த இரட்டையெண்ணுளர் தத்தம் பழைய ஒரே வரிசையான இடங்களில் சென்று நின்று "வலப்புறம் திரும்புக, நடக்க" என்னும் கட்டளையால் கற்பிப்போரைக் கைகூப்பித் தலைவணங்கி வலப்புறந் திரும்பி வரிசையாக நடந்து வகுப்பிடஞ் சேரச் செய்தலாம்.

உடற்பயிற்சிகளைச் செய்யும்போதும் சிறுவர்கள் கற்பிப்போர் கட்டளைக்கு முற்றிலும் இணங்கி அடங்கிப் பயில்தலாம். இவ்வகைப் பயிற்சி ஓர் நாளும், அவர்கள் கற்பிப்போர் கட்டளையால் கட்டுறுது அவர் தம கருத்துப்போல் ஓா நாள் ஆட்டயர்தலுமாக மாறுதல் செய்வது நலம். அப்

விளையாட்டு காவடியாட்டம்.

படி யாட்டயர்தலில் எல்லோரும் ஒன்றுபடு ஓர் ஒழுங்கு பொருந்தவும் அவர்களுக்குள் நேரும் சச்சரவுகள் களையப் பெறவும் சிறிது கண்ணோக்கத்தைக் கற்பிப்போர் செலுத்தவேண்டும். அவர்களில் சில பிள்ளைகளை முன் பொறுக்கி ஒருவன் காவடி சுமபபவனாகவும் இருவர் பின் தொடர்ந்து பாடுபவராகவும் மற்றையோர் வரிசைபெற்று வட்டமாக விலகி விலகி நிற்குமாறு செய்தல். காவடி தூக்குவது தமிழ்க் கடவுளும் குறிஞ்சிநிலக் கடவுளுமாய முருகபிரானைத் தொழுதலுக்காகவே யாம்.

(வரும்.)

சோழ. க. சச்சிதாநந்த முதலியார்,
2nd Asst., Corpn., School, Choolai, Madras.